யாக்கோபு

யாக்கோபு

சபை வரலாற்றின் ஆரம்பத்தில் யாக்கோபு நிருபம் எழுதப்பட்டது எனக் கூறலாம். இந்நிருபம் எருசலேமிலும், சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட இதரப் பட்டணங்களிலும் வாழ்ந்த யூதக் கிறிஸ்தவர்களுக்கானது.

ஆக்கியோன்

யாக்கோபு நிருபத்தின் ஆக்கியோன் இயேசுவின் சகோதரனாகிய யாக்கோபு என்பதை வேதப்பண்டிதர்களில் அநேகர் ஒத்துக் கொள்ளுகின்றனர் (மத்தேயு 13:55; கலாத்தியர் 1:19). இந்த யாக்கோபு ஆரம்பத்தில் இயேசுவை விசுவாசிக்கவில்லை (யோவான் 7:5,10). ஆனால், உயிர்த்தெழுந்த கிறிஸ்து இவருக்கும் தரிசனமானார் (1கொரிந்தியர் 15:7), பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் ஸ்நானத்தைப் பெற்றுக்கொண்ட சீஷர்களின் கூட்டத்தில் இவரும் ஒருவராயிருந்தார் (அப்போஸ்தலர் 1:14). இவர் எருசலேம் சபையின் ஓர் தலைவராகவும், ஆலோசனைச் சங்கத்தின் பொறுப்பாளராகவும் இருந்தார் என வேதம் சுட்டிக் காட்டுகிறது. (அப்போஸ்தலர் 15:13,20). தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் முடிவில் புறஜாதிகளிடத்தில் தேவன் செய்தவைகளைச் சொல்லும்படி பவுல் யாக்கோபையும், அவரோடிருந்த மற்ற மூப்பர்களையும் சந்தித்தார். (அப்போஸ்தலர் 21:17-19).

வரலாற்று அமைப்பு

ஆரம்பத்தில் சபை முற்றிலும் யூதர் மயமாயிருக்கிறது. யாக்கோபு நிருபத்தை நாம் படிக்கும்பொழுது, இதன் ஒட்டுமொத்தப் பொருளடக்கம், பாணி ஆகியவை இந்த ஆரம்ப காலத்திற்குப் பொருந்தும் என்பதை நாம் காண்கிறோம்.

இந்நிருபம் "பன்னிரெண்டு கோத்திரங்களுக்கும்" எழுதப்பட்டுள்ளது. இது யூதரைக் குறிப்பதாகும் (1:1). மேலும், விசுவாசிகள் கூடி வரும் இடத்திற்கு ஆலயம் என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது (2:2). இந்நிருபத்தில் ஆபிரகாம் (2:20-24), ராகாப் (2:25-26), எலியா (5:17,18) போன்ற பழைய ஏற்பாட்டிலுள்ள அநேகரின் பெயர்கள் மாதிரிகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன. இவர்கள் எல்லோரும் யூதக் கிறிஸ்தவர்களால் நன்கு அறியப்பட்டிருந்தார்கள்.

யாக்கோபு நிருபம் சபையின் ஆரம்ப காலத்திற்கு உட்பட்டது என நம்புவதற்கான மற்றொரு உண்மை உண்டு. இந்நிருபத்தில் நியாயப்பிரமாணம் சம்பந்தப்பட்டக் கேள்விகள் இடம் பெற்றிருந்த போதிலும், புறஜாதிகளைப் பற்றிய கருத்து வேற்றுமை அல்லது எருசலேம் சங்கத்தினால் முடிவு செய்யப்பட்டத் தீர்மானம் போன்றவை இடம் பெறவில்லை. இந்நிருபத்தின் ஆக்கியோன் ஆலோசனைச் சங்கத்தின் பொறுப்பாளராக இருந்தபடியால், சங்கம் ஏற்கெனவே கூடியிருந்தால் இந்த முக்கியமான விஷயத்தை யாக்கோபு விவாதித்திருப்பார் என்பது போலக்காணப்படுகிறது.

பொருளடக்கம், அதன் சுருக்கமும்

யாக்கோபு தனது உடன் விசுவாசிகளுக்கு எழுதிய கடிதத்தில், ஓர் கிறிஸ்தவனுக்கு உண்டாகும் உபத்திரவங்கள் மற்றும் சோதனைகள், எதை விசுவாசிக்கிறானோ அதை செயற்முறைப்படுத்துதல், பொருளாசை மற்றும் சுயநல வாழ்க்கையின் அபாயங்கள், தேவன்பேரிலுள்ள ஸ்திரமான விசுவாசத்தைப் பேணுதல் போன்றவற்றை விவாதிக்கிறார்.

யாக்கோபு

யாக்கோபு:- தேவ பக்தியுள்ள மனிதனின் தராதரங்கள்

1. சோதிக்கப்படும்பொழுது அவனது மனோபாங்கு *(1:1-18).*
2. வசனத்திற்கு அவனது இணக்கம் *(1:18-27).*
3. அவனது உறவுகள் *(2:1-26).*
4. அவனது பேச்சு *(3:1-12).*
5. அவனது ஞானம் *(3:13-18).*
6. அவனது தாழ்மை *(4:1-17).*
7. அவனது பொறுமை *(5:1-12).*
8. அவனது விசுவாசம் *(5:13-20).*

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும் யாக்கோபு 1:2-4, 12-17

முன்னுரை

அ. யாக்கோபின் நிருபம் தவறுகளையும், தப்பாக விளங்கிக்கொள்வதையும், விசுவாச வாழ்க்கையில் பின் வாங்குவதையும் திருத்துவதற்காக எழுதப்பட்டதாகும். இது எருசலேமிலுள்ள சபை போதகரால், பாலஸ்தீனம் மற்றும் பிற நாடுகளில் சிதறப்பட்ட விசுவாசிகளுக்கு எழுதப்பட்டது.

ஆ. இந்த நிருபத்தின் மத்தியக் கருத்து, "நீடிய பொறுமை", "விசுவாசம்", "நற்கிரியைகள்" இவைகள்:

1. விசுவாசத்தில் முதிர்ச்சியடைவதற்கும்,

2. கடைசியில் "ஜீவக் கிரீடத்தை" பெற்றுக்கொள்வதற்கும் வழிநடத்தும் என்று யாக்கோபு கூறுகிறார்.

இ. இந்த நிருபத்தின் முதல் பாகம், விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளினாலும் சோதனைகளினாலும் விசுவாசி அடையும் நன்மைகளைப் பற்றி கூறுகிறது. இந்த போதனையின் கருத்து இதுவே.

I. பரீட்சைகளாலும் சோதனைகளாலும் விசுவாசியின் வாழ்க்கையில் அடையும் நன்மைகள் (யாக்கோபு 1:2-4).

அ. 2ம் வசனம்: "பரீட்சைகளின் பலவிதங்கள்" அவைகள்:

1. ஒரு பக்திமான், கிறிஸ்துவின் மீதுள்ள தன் விசுவாசத்தை, நிரூபித்துக் காட்ட ஏற்படும் தாக்குதல்கள்.

2. உபத்திரவம், மிக்க அபாயகரமான சூழ்நிலைகள் சுவாசத்தை சோதனைக்குட்படுத்துகிறது. விசுவாசம் மேன்மை உள்ளதுதானா? என்று பரீட்சிக்கும். ஒரு விசுவாசிக்கு பரீட்சைகளும் சோதனைகளும் எதிர்பாராத தருணத்தில் ஏற்படுகிறது. இது பின்னால் மறைவிலிருந்து தாக்குவது போலும், நடந்து செல்கையில் கல்லில் இடறுவது போலும், நடக்கும் பாதையில், பார்க்கக் கூடாத கரடு முரடான தடம்போலும் இருக்கிறது.

ஆ. ஓர் நல்ல எடுத்துக்காட்டு - எரிகோவிற்குச் செல்லும் பாதையில், நல்ல சமாரியனால் காப்பாற்றப்பட்ட மனிதன். இவன் எதிர்பாராத விதமாக திருடர்களால் பிடிக்கப்பட்டு, தாக்கப்பட்டு, வெகு வேதனைக்குட்பட்ட சம்பவமாகும் (லூக்கா 10:30).

இ. மற்றொரு எடுத்துக்காட்டு, பவுல் கப்பல் சேதத்தில் துன்பப்பட்ட அனுபவமாகும். கப்பல் அமைதலான கரையை அடைய சென்று கொண்டிருந்தபோது, திடீரென்று, எதிர்பாராத விதமாக, சொறிமணலில் அகப்பட்டு, அலைகளால் துண்டு துண்டாக உடைந்து போயிற்று (அப்போஸ்தலர் 27:41). நம் வாழ்க்கையின் சில சோதனைகள், ஒரு கப்பல், கடலில் சொறிமணலிலும் சீறும் புயலிலும் அகப்பட்டு, அங்கும் இங்கும் அலைக்கழிக்கப்படும் நிலையில் இருப்பது போன்ற அனுபவத்தை நினைக்க வைக்கும் நிலையில் தாக்குகின்றது.

ஈ. மற்றொரு எடுத்துக்காட்டு: ஒரு பேரங்காடியின் வாகனங்கள் நிற்கும் இடத்தில், இறங்கி நிற்கும் போது, சடுதியாக, ஒரு மனிதன் துப்பாக்கிக் குழாயை தன் மகன், மற்றும் மருமகள் முகத்திற்கு நேராக பிடித்தால் ஏற்படும் திடீர் தாக்குதல் போன்றது.

உ. இக்காலத்தில், தன் குடும்பம், சிநேகிதர் மற்றும் உறவினர்கள் முதலான தன் அன்புக்குரியவர்களிடமிருந்து பிரிக்கப்படுதலும், நாட்டை ஆளும் அதிகாரிகளால், தன் ஜீவனுக்கே அபாயம் உண்டாகும்

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும் யாக்கோபு 1:2-4, 12-17

அளவிற்கு, நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் கடின அனுபவங்கள் விசுவாசிகளுக்கு ஏற்படுகிறது. குடும்பங்களில் ஏற்படும் எதிர்பாராத நஷ்டங்கள், வியாதி, மற்றும் தீவிபத்துக்கள்; இவை தவிர இயற்கையின் சீற்றத்தால், திடீர் வெள்ளப்பெருக்கு, புயல், சூறாவளிக்காற்று, பூமி அதிர்ச்சிக்கள் முதலியனவும், தற்கால விசுவாசிகளைத் தாக்கும் சத்திகளாகும். இப்படிப்பட்ட கஷ்ட நேரங்களில், சாத்தான் கீழ்கண்டவாறு ஒரு விசுவாசியை சோதிக்கிறான்.

1. தேவனின் அரவணைப்பையும், பாதுகாப்பையும் சந்தேகிக்கச் செய்கிறான்.

2. தேவன் தன்னை இந்த இக்கட்டிலிருந்து விடுவிக்கக் கூடுமா என்ற கேள்வியை எழுப்புகிறான்.

ஊ. "சோதனை" என்பது சன்மார்க்க நடத்தையிலிருந்து விழுந்து போகவைக்கும், துன்மார்க்கப் பாவங்களைச் செய்ய ஆசையைத் தூண்டும் சூழ்நிலையை உண்டாக்குவதையும் குறிக்கும். இதை மிருகங்களைப் பிடிக்கும் கண்ணிக்கும் (பொறி), மீன் பிடிப்பவன் தூண்டில் போட்டு மீன் பிடிப்பதற்கும், ஒப்பிட்டு உருவகப்படுத்தலாம். யாக்கோபு எழுதின பிந்தின அதிகாரங்களில் கீழ்க்கண்ட சன்மார்க்க சோதனைகள் கூறப்பட்டுள்ளது:

1. ஐசுவரியம், மற்றும் உலக மேன்மைகளின் மேல் வாஞ்சை.

2. மனநிலையை (கோபத்தை) அடக்க முடியாத நிலை.

3. தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டும், அதன்படி நடக்காமல் இருத்தல்.

4. சக விசுவாசியைக் குறித்து அவர் பின்னால் தாறுமாறாக, மற்ற விசுவாசிகளிடம் பேசுவது.

5. விசுவாசிகள் மத்தியில் ஐசுவரியம், மற்றும் சமூக நிலையில் ஏற்ற தாழ்வுகள் அடிப்படையில் பட்சபாதமாக இருத்தல்.

6. நற்கிரியை இல்லாத விசுவாசம் - சபையின் நடைமுறை காரியங்கள் ஒன்றிலும் பங்கெடுக்காமல், ஒன்றும் செய்யாமல் இருத்தல்.

7. பொறாமை உணர்ச்சியோடு விசுவாசிகள் மத்தியில் பகையை உண்டாக்குதல்.

8. பெருமையாக வீம்பு பேசுதல்.

9. சுய நலம் பேணுதல்.

எ. ஒரு விசுவாசியின் சன்மார்க்க நிலையை சோதிக்கும் மற்ற பரீட்சைகள் - விபச்சாரம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரக ஆராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள் வெறிகள், பொறாமைகள் (கலாத்தியர் 5:19-21). மற்றும் திருடுதல், பொருளாசை, சுய புணர்ச்சி, ஆண்புணர்ச்சி, கொலை, மாயவித்தை, பொய் முதலியன. (1கொரிந்தியர் 6:9-10, வெளிப்படுத்தின விசேஷம் 22:15).

ஏ. இப்படிப்பட்ட பலவிதமான சோதனைகளால் தாக்கப்பட்டு, பரீட்சிக்கப்படும்போது "அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று யாக்கோபு கூறுகிறார். அதாவது இவைகள் ஒரு விசுவாசியை, மகிழ்ச்சியாக சாந்தத்துடன், கர்த்தருக்குள் களிகூர செய்வதாக இருக்கவேண்டும்.

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும் யாக்கோபு 1:2-4, 12-17

யாக்கோபு 1:3-4. "விசுவாசத்தின் பரீட்சை பொறுமையை உண்டாக்குகிறது." "பொறுமை" என்பது "எதையும் தாங்கும் பலன்." எனவே பொறுமையாக எதற்கும் காத்திருத்தல் எனப்படும். ஆகவே பரீட்சைகளையும், சோதனைகளையும் தாங்கி நிற்கிறவன் இப்படிப்பட்டவனாக இருக்கிறான்:

1. கிறிஸ்துவின் மீதுள்ள அவன் விசுவாசமும், நம்பிக்கையும் உன்னதமானது என்று நிரூபிக்கிறான்.

2. அவன் வாழ்க்கையில் சந்திக்கும் மற்ற பரீட்சைகளையும், சோதனைகளையும் மேற்கொள்ளும் பக்குவத்தை அடைகிறான்.

ஐ. இவை (பரீட்சைகளும், சோதனைகளும்) ஒரு விசுவாசிக்கு வருவதின் நோக்கம் - "அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப் பார்க்கிலும் அதிக விலையேறப்பட்ட விசுவாசம், சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது, புகழ்ச்சியும், கனமும், மகிமையும் உண்டாகக் காணப்படும்" (1பேதுரு 1:7

ஒ. யோபு பலவிதமான பரீட்சைகளிலும், சோதனைகளிலும், பொறுமையாக நிலைத்து நின்றபோது, சாத்தான் மற்றும் உன்னதத்திலுள்ள சாத்தானின் துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் முன்பாக தேவன் வெகுவாக மகிமைப்பட்டு, அவர் நாமம் மேன்மைப்பட்டது. (யோபு 1:1, 2:10). சாத்தான், தேவனுக்கு முன்பாக யோபை குற்றம் சாட்டினான். கீழ்க்கண்ட பரீட்சைகளையும், சோதனைகளையும் யோபு பொறுமையுடன் தாங்கிக்கொள்ள மாட்டான் என்று சாத்தான் சவால் விட்டான்.

யோபு கீழ்க்கண்டவற்றை இழந்து போனான்.

1. தன் பிள்ளைகளையும் அவர்கள் குடும்பங்களையும்,

2. அவனுடைய எல்லா உலக ஆஸ்தி,

3. அவனுடைய சரீர சுகம்.

4. அவன் மனைவி, தேவன் மீதுள்ள அவன் நம்பிக்கையை விட்டு விட தூண்டினாள்.

5. அவனுடைய மூன்று நண்பர்களும், அவனுக்கு தவறான ஆலோசனை தந்தனர். இருந்தபோதிலும் அவன் பொறுமையாக சோதனைகளைச் சகித்ததினால் தேவன் உன்னதத்தில் சாத்தானின் துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் முன்பாக மகிமைப்பட்டார். அது போலவே நாம் தற்காலத்தின் சமுதாய சன்மார்க்க பாவங்களில் விழ ஏற்படும் பரீட்சைகளிலும், சோதனைகளிலும் விழுந்து விடாமல் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளும்போது உன்னதங்களிலுள்ள சாத்தானின் துரைத்தனத்திற்கும், அதிகாரத்திற்கும் முன்பாக கிறிஸ்து மகிமையாக உயர்த்தப்படுவார் (எபேசியர் 3:10).

II. பரீட்சைகள், சோதனைகளின் பல படிகள் (வளர்ச்சி) (யாக்கோபு 1:13-17).

அ. வசனம் - 13. "சோதிக்கப்படுகிறவனெவனும் தான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக" "தேவன் எல்லாவற்றிற்கும் மூலகாரணராக இருப்பதால், அவரே பரீட்சைகளுக்கும், சோதனைகளுக்கும் பொறுப்பானவர்" என்று சிலர் சாதாரணமாகக் கூறுகின்றனர். யாக்கோபு இதை திட்டமாக மறுக்கிறார். எப்படியெனில் "தேவன் பொல்லாங்கனால் சோதிக்கிறவர் அல்ல, மற்றும் தீமை செய்ய அவர் ஒருவரையும் சோதிப்பதும் இல்லை.

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும் யாக்கோபு 1:2-4, 12-17

ஆ. வசனம் - 16-17. "மோசம் போகாதிருங்கள்" சாத்தானும் பிசாசுகளுமே பாவம் செய்யத் தூண்டுகின்றன, தேவன் அல்ல. (1கொரிந்தியர் 7:5). நாம் கீழ்ப்படிகிறோமா என்று தேவன் சோதிக்கிறார். (ஆதியாகமம் 22:1), (யாத்திராகமம் 16:4), (எபிரெயர் 11:17). நாம் சோதிக்கும் படியாக வேறு இடத்திற்குச் செல்ல அனுமதிக்கிறார். (லூக்கா 4:1-13). நாம் ஆவியில் பலப்படும் படியாகவும், கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளவும், அவ்வாறு அனுமதிக்கிறார். ஆனால் அவர் ஒருபோதும் பாவம் செய்யும்படி சோதிப்பது இல்லை.

இ. தேவனின் பண்புகளில் நற்குணம் (நன்மை செய்வது) ஒன்று. நல்ல வரங்களையே கொடுக்கிறார். இது ஒருபோதும் மாறாது. சத்திய வசனத்தை (இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம்) கேட்பதின் மூலமாக, புதிய ஜீவனை நமக்குக் கொடுப்பதிலிருந்து அறியலாம். பாவத்தின் வல்லமையை அழிப்பதற்காகத், தம்முடைய ஒரேபேறான குமாரனை அனுப்பிய தேவன், ஒருபோதும் பாவம் செய்ய ஒருவரையும், சோதிக்க மாட்டார்.

ஈ. வசனம் 14. "அவனவன் தன் தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்" சாத்தானும் அவனுடைய ஏராளமான பிசாசுகளும்:

. விசுவாசியின் முன் சோதனைகளை வைத்து பாவம் செய்யத் தூண்டுகின்றன

2. ஒழுக்கக் கேடான பாவங்களைச் செய்ய சோதிக்கின்றன.

3. சோதிக்கப்படும்போது தேவனுடைய அன்பையும், பாதுகாப்பையும் சந்தேகிக்க வைக்கின்றன.

உ. ஒருவன் ஆதாமிடமிருந்து சுதந்தரித்த பாவ சுபாவம், அவன் இயேசுவின் மீது வைக்கும் விசுவாசத்தால் பலமற்றதாகிறது. (ரோமர் 8:2). அவன் பாவசுபாவத்தால் ஆளப்படாமல், பிதாவினுடைய ஆவியினால் வழிநடத்தப்படுகிறான். இருந்தபோதிலும், பாவ சுபாவம் முழுவதும் ஒழிந்து போயிற்று என்று அர்த்தமல்ல. மாறாக அது இன்னும் உயிருள்ளதாக இருப்பதினால் தொடர்ந்து அடக்கப்படவேண்டும். அது வைராக்கியமாக, தொடர்ந்து, இவ்வுலக வழிபாடுகளுக்காக ஏங்குகிறது. ஆகவேதான் அநேக சந்தர்ப்பங்களில் சாத்தான் விசுவாசியை சோதித்து வெற்றி பெறுகிறான்.

ஊ. வசனம் - 15. "பின்பு இச்சையானது கர்ப்பம் தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்." படிப்படியாக தொடர்ந்து வளர்ந்து ஒழுக்கக் கேடான பாவம் செய்யத் தூண்டும். அத்துடன் தேவனுடைய அன்பையும், பாதுகாப்பையும் சந்தேகிக்கச் செய்கிறது. இது சில வேளைகளில் சிலர் அனுபவத்தில் பல வருடங்களாக வளர்ந்து கீழ்க்கண்டவாறு முதிர்ச்சி அடைகிறது.

1. பிரிவினை - விசுவாசிகள் தங்கள் சக விசுவாசிகளிடமிருந்து பிரிந்து செல்கின்றனர். ஒவ்வொரு சபையாக மாறி, மாறி ஆராதனைகளில் பங்கெடுக்கின்றனர்.

2. சோதனை - சாத்தானாலும், பிசாசினாலும், பொல்லா போசனைகளுக்கும், தேவனுடைய அன்பையும் பாதுகாப்பையும் சந்தேகிக்க தூண்டப்படுகின்றனர்.

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும்
யாக்கோபு 1:2-4, 12-17

3. புறம்பாக தள்ளப்படுகின்றனர் - அதிக துன்மார்க்கமான சிந்தனைகள், அசுத்தமான பாவகாரியங்களை பார்ப்பதில் மகிழ்ச்சி, தேவனுடைய பராமரிப்பையும், பாதுகாப்பையும் சந்தேகிப்பது.

4. மதி மயங்கி போதல் - சுய சித்தம் பலவீனப்பட்டு தேவன் மீதும், கிறிஸ்து மீதும் உள்ள விசுவாசம் தளர்ந்து விடுதல்.

5. இச்சை கர்ப்பம் தரித்தல் - கிறிஸ்துவின் அன்பை சந்தேகித்து, முழுவதும் பாவத்திற்கு ஒப்புக்கொடுத்தல்.

6. பாவம் - பாவம் செய்து, தேவன் மீதும், கிறிஸ்து மீதும் உள்ள விசுவாசத்தை இழந்து விடுதல்.

7. மரணம் - ஆவி மரிக்கிறது, தேவனிடமிருந்தும் கிறிஸ்துவிடமிருந்தும் பிரிக்கப்படுதல்.

எ. இவ்வாறு படிப்படியாக தொடர்ந்து வளர்ந்து பாவம் முதிர்ச்சி அடைவதை, ஏவாள் சாத்தானால் சோதிக்கப்பட்டு பாவத்தில் விழுந்த சம்பவத்தில் தெளிவாகக் காணலாம். சாத்தான் படிப்படியாக ஏவாளை சோதித்த முறை:

1. தேவனுடைய வார்த்தையை சந்தேகிக்க வைத்தல். "தேவன் உண்மையாகவே, தோட்டத்தின் மத்தியிலும் மரத்தின் கனியை புசிக்கக் கூடாது என்று கூறினது உண்டோ?" "நீங்கள் அந்த மரத்தின் கனியை புசிக்கும் நாளில் சாவதில்லை"

2. அவள் அந்தக் கனியை பார்ப்பதில் மகிழ்ச்சி அடைந்தாள்.

1) அது புசிப்புக்கு நல்லது என்றும் 2) கண்களுக்கு இன்பமானது என்றும் 3) புத்தியைத் தெளிவிக்கிறதும், இச்சிக்கப்படத்தக்க தாகவும் இருக்கக் கண்டாள் (உலகத்திலுள்ள பொக்கிஷம், உலகத்தின் வழிபாடுகள் மற்றும் உலகம் மேன்மை பாராட்டும் அறிவு).

3. அவள் பாவத்தில் விழுந்தாள். தன் கணவனையும் பாவத்திற்குள் வழிநடத்தினாள்.

4. ஆதாம், ஏவாள் இருவரும் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டார்கள்.

பாவமும், சந்தேகித்தலும் இவ்வாறு படிப்படியாக தொடர்ந்து வளர்ந்து முதிர்ச்சி அடைகிறது.

இது கீழ்க்கண்டவாறு இருக்கிறது.

1. ஒரு விசுவாசிக்கு தீமைக்கும் காரணமான, உண்மைக்கும் புறம்பான செய்தியை பரவும்படி செய்தல், இது வழக்கமாகி விடுகிறது.

2. சபையின் தலைவருக்கு விரோதமாக எழும்புவது அல்லது மற்றவர்கள் எதிர்க்க துணை செய்வது. தேவன் யாரை சபைக்கு தலைவராக அனுப்புகிறார் என்பதைக் குறித்து கவலை இல்லாமல் வாழ்வது.

3. குறை கூறிக் கொண்டிருப்பவராக மாறுதல். இதுவே அவர் யாருடன் பேசினாலும் அடிப்படைக் காரணமாக இருக்கும்.

4. சபையிலுள்ள ஒரு விசுவாசியிடமோ, சபையின் ஓர் சூழ்நிலையைக் குறித்தோ மனக்கசப்பு அடைதல்... இந்தக் கசப்பின் வேர் ஆழமாக வேர்கொண்டு மற்றவர்களிடம் தொடர்பு கொள்ளும் போது வெளிப்படுதல்.

5. ஓர் உதாரணம் - ஒரு வாலிபன் ஒரு கடையில் தான் விரும்பிய பொருள் இருப்பதைக் காண்கிறான் - அவன் தனக்குள்ளே இவ்வாறு கூறிக்கொள்கிறான், '

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும்
யாக்கோபு 1:2-4, 12-17

அது எனக்கு வாங்க விருப்பம். ஆனால் அதை வாங்குவதற்கு எனக்குப் பணம் இல்லை." அப்பொழுது ஒரு எண்ணம் தோன்றுகிறது. "அதை எவ்வாறு திருடுவது என்று எனக்குத் தெரியும். மற்றவர்கள் திருடுகிறார்கள். தேவனும் நான் திருடுவதைக் குறித்து ஒன்றும் நினைக்கப்போவதில்லை."

6. ஆபாச படங்களைப் பத்திரிகைகளிலோ, தொலைக்காட்சி பெட்டியிலோ, சினிமாவிலோ, அவை எப்படி இருக்கின்றன என்று பார்க்கலாம் என்று முதலில் பார்ப்பது. பின் அப்படிப்பட்ட ஆபாச படங்களைப் பார்க்க மேற்கொள்ள முடியாத மிகுந்த ஆவல் உண்டாக்கப்படுகிறது.

7. இது தாவீது பத்சேபாளிடம் விபச்சாரம் செய்த சம்பவத்தை ஒத்தது. (2சாமுவேல் 11). தாவீது அரண்மனை உப்பரிக்கையின் மீது உலாத்திக் கொண்டிருந்தான்.

1) அவன் பத்சேபாள் குளிப்பதைப் பார்த்தான். 2) அவள் மிகுந்த அழகுள்ளவள் என்று கண்டான். 3) அவளை இச்சித்தான். 4) அவளை அரண்மனைக்கு அழைப்பித்தான். 5) கடைசியாக அவளுடன் விபச்சாரம் செய்தான். 6) அவள் கணவனைக் கொலை செய்தான்.

ஆனால் மக்கள் தங்கள் வாழ்க்கையில் பாவம் செய்யும்போது, இவ்வாறு கூறுவதைக் கேட்கலாம்.

1. நான் அதிகம் கஷ்டம் வருவதற்குள் விட்டுவிடுவேன்.

2. நான் ஏன் பாவம் செய்தேன் என்று தேவன் அறிவார்.

3. இந்த சிறிய பாவங்கள் பரலோகத்தை நான் இழப்பதற்குக் காரணமாய் இராது.

4. தேவன் பரிசுத்த வாழ்க்கை வாழவேண்டும் என்று உண்மையாகவே கூறவில்லை.

III. சோதனைகளையும், பரீட்சைகளையும் சகிக்கிற மனுஷன் பெற்றுக்கொள்ளும் பரிசு.

அ. "சோதனையை பொறுமையுடன் தாங்குகிற மனுஷன் (விசுவாசி) பாக்கியவான்" பாக்கியவான் என்றால் செல்வாக்குடன் சந்தோஷமாக வாழ்வது. (மத்தேயு 5:3-12).

ஆ. யாக்கோபு இவ்வாறு கூறுகிறார். "நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது, பொறுமையை உண்டாக்கும் என்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். மேலும், பொறுமையுடன் சோதனையைச் சகிக்கிறவர்கள், ஒன்றிலும் குறைவுள்ளவர்களாய் இராமல் பூரணராயும், நிறைவுள்ளவராயுமிருப்பதால் சந்தோஷப்பட்டு களிகூருங்கள்" என்று கூறுகிறார்.

இ. வசனம் - 12. "ஜீவ கிரீடம்" பலவிதமான பரீட்சைகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில், சந்தோஷப்பட்டு களிகூர காரணமாய் இருப்பது, "ஜீவக் கிரீடத்தை" முடிவில் பெற்றுக்கொள்வதினால்தான். கடைசிமட்டும், சோதனைகளை சகித்துக்கொள்கிற ஒவ்வொரு விசுவாசியும் ஜீவக் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வான்.

ஈ. தேவனின் கடைசி நியாயத்தீர்ப்பின் நாளிலே இக்காட்சியைக் காணலாம். வெற்றிக்கோட்டை கடந்துவரும் ஒவ்வொரு விசுவாசிக்கும், ஜீவக் கிரீடம் சூட, ஓட்டப்பந்தயத்தின் முடிவில் தேவன் காத்து நிற்கிறார்.

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும் யாக்கோபு 1:2-4, 12-17

பரீட்சைகள் சோதனைகளில், உண்மைத் தன்மையுடன் நிலைத்திருக்கும் விசுவாசிகள் ஒவ்வொருவரும் வெற்றிக்கிரீடம் பெற்றுக்கொள்வர். முதலிடத்தைக் குறிக்கும் நீல நிறக் கொடி ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். நகரப் புறங்களிலு, கிராமப் புறங்களிலும் போட்டிகளில் கலந்து கொள்ளும் ஒரு சாதாரண மனிதனின் வாழ்கை இதுவே.

உ. ஜீவக் கிரீடம் என்பது நித்திய ஜீவன், இதுவே வாழ்க்கை, ஓட்டப்பந்தயத்தின் முடிவில் ஒரு விசுவாசி பெற்றுக்கொள்ளும் பரிசு.

ஊ. தீமோத்தேயுவிடம் பவுல் இவ்வாறு கூறுகிறார், “ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்” (2தீமோத்தேயு 4:8).

எ. இயேசு சிமிர்னா சபையை நோக்கி, “நீ மரண பரியந்தம் உண்மையாய் இரு (பரீட்சைகளிலும், சோதனைகளிலும்) அப்பொழுது ஜீவக் கிரீடத்தை உனக்குத் தருவேன்” என்று கூறுகிறார்.

ஏ. “யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப் பட்டிருக்கிறீர்கள். கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள். கர்த்தர் மிகுந்த உருக்கமும், இரக்கமும் உள்ளவராய் இருக்கிறாரே.” ஒழுக்கக் கேடான பாவங்களைச் செய்ய, சோதனைகளை சாத்தான் கொடுக்கும்போது,

அதை பொறுமையாய் சகித்து மேற்கொள்கிற ஒவ்வொரு விசுவாசிக்கும், தேவன் பரிசுடன் காத்திருக்கிறார்.

முடிவுரை

அ. விசுவாசி சோதனைகளையும், பலவிதமான துன்பங்களையும் அனுபவிக்கிறான். அத்துடன் ஒழுக்கக் கேடான பாவங்களைச் செய்யும்படி, சாத்தானாலும், அவனுடன் சேர்ந்த பொல்லாத அந்தகார தூதர்களாலும் சோதிக்கப்படுகிறான்.

இதை மேற்கொள்ள:

1. விசுவாசி கிறிஸ்துவுடன் நெருங்கிச் சேர்ந்து பிசாசை எதிர்க்க வேண்டும்.

2. சோதனையைச் சகிக்கும்போது விசுவாசத்தில் பலமுள்ளவர்களாகிறார்கள்.

3. மேலும் இது, உன்னதத்திலுள்ள சாத்தானின் துரைத்தனத்திற்கும், பிசாசுகளின் அதிகாரத்திற்கும் முன்பாக, தேவனுக்கு கனமும், மகிமையும் உண்டாகச் செய்யும்.

4. அவர்கள் ஜீவிய ஓட்டத்தின் முடிவில் “ஜீவக் கிரீடத்தை” பெற்றுக்கொள்வார்கள்.

ஆ. ஆகவே சாத்தான் மூலமாகவும், பிசாசுகளாலும் சோதிக்கப்பட்டு, பரீசிக்கப்படும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்?

I. தேவனுடைய அன்பையும் பாதுகாப்பையும் குறித்து சந்தேகம் எழும்போது:

அ. தேவனின் வார்த்தையை நினைவுகூரு. அவர் உண்மையுள்ளவர். அத்துடன் நம் பலத்திற்கு அதிகமாக நாம் சகிக்கக் கூடாத அளவிற்கு சோதிக்கப்பட விடமாட்டார். அதற்கு முடிவு உண்டாகச் செய்வார்.

விசுவாசியின் வாழ்க்கையில் பரிட்சைகளும் சோதனைகளும்
யாக்கோபு 1:2-4, 12-17

1) ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் அவர் காண விரும்பும் நோக்கம் நிறைவேறின பின்பு அல்லது 2) விசுவாசி சோர்ந்து மேற்கொள்ளப்பட நேரும் போது, தேவன் அனுமதித்த சோதனைகளையும், பரிட்சைகளையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விடுவார்.

ஆ. தேவன் கடந்த காலங்களில் உண்மை உள்ளவராகக் காத்த நேரங்களை நினைவுகூரு.

இ. பொறுமை உனக்கு வளரவும் அதனால் நீ கடைசி மட்டும் நிலைத்திருக்க தேவன் கிரியை செய்கிறார்.

II. ஒழுக்கக்கேடான பாவங்களைச் செய்ய சோதிக்கப்படும்போது:

அ. பிசாசை எதிர்த்து நில், அவன் உன்னை விட்டு ஓடிப்போவான்.

ஆ. சோதனை தாக்குவதற்கு காரணமான இடம், சூழ்நிலை அல்லது ஒரு ஆள் (மனிதன்) இவற்றை விட்டு விலகிப் போ. (ஓடி விடு, தவிர்த்து விடு, மறைந்து விடு).

இ. திடமாக நின்று பிசாசை எதிர்த்து போராடு. (உள்ளான இருதயத்துடன்).

ஈ. ஆவியில் ஜெபித்து தேவனை அண்டிக்கொள் உ. இது பலமுள்ள ஆவிக்குறிய போர் வீரர்களாக நம்மை உருவாக்கும்.

இது நம் வாழ்க்கைப் போராட்டத்தில் சாத்தானாலும், பிசாசுகளாலும் ஏற்படக் கூடிய ஆவிக்குரிய போராட்டத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்தும்.

மாற்று முடிவுரை

அ. முன்பு கூறியது போல்.

ஆ. இருந்த போதிலும், சிலர் தேவனுடைய அன்பையும் பாதுகாப்பையும் சந்தேகிக்கின்றனர். மற்றும் சிலர் சாத்தான் பக்கம் சார்ந்து, ஒழுக்கம் கெட்ட பாவங்களைச் செய்து விடுகின்றனர்.

இ. இக்காரணத்தினால் அதாவது தேவனை சந்தேகித்ததற்காகவும், ஒழுக்கம் கெட்ட பாவங்களை செய்ததற்காகவும், மனம் திரும்ப உங்களுக்கு ஒரு தருணம் தர விரும்புகிறேன். இப்பொழுதே முன் வந்து ஆண்டவருடன் பேசுங்கள். நீங்கள் விரும்பினால் ஜெபிக்கலாம்.

வேதம் இவ்வாறு கூறுகிறது.

1. உங்கள் இருதயத்தைச் சுத்திகரியுங்கள், பாவத்தை வெறுத்து விடுங்கள்.

2. ஆண்டவருக்கு முன்பாக துக்கித்து, அழுது புலம்புங்கள். இதுவே உண்மையான மனந்திரும்புதல். இது தேவனின் இரக்கத்தைக் கொண்டு வரும்.

3. தேவனுக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள். நீங்கள் பாவத்தால் கீழ்த்தரமான நிலையில் இருக்கிறீர்கள். ஆகவே தேவனுக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள்.4. உங்கள் பாவங்களை தேவனிடமும், அவசியமானால் மனிதரிடமும் அறிக்கையிடுங்கள். அவர் உங்கள் பாவங்களை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி உங்களைச் சுத்திகரிப்பார்.

விசுவாசியின் வாழ்க்கையில் பரீட்சைகளும் சோதனைகளும்
யாக்கோபு 1:2-4, 12-17

அவர் உங்களை தூக்கி எடுத்து, விசுவாசிகளின் ஐக்கிய சரீரமாகிய சபையில் மறுபடியும் இணைத்துவிடுவார். (யாத்திராகமம் 4:7-10).

5. ஆகவே ஆவிக்குரிய போராட்டத்திற்கு ஆயத்தம் இதுவே.

6. இது ஆவிக்குரிய வீரர்களுக்கும், சாத்தானை எதிர்த்து நிற்கும் சபைக்கும் மிகவும் அவசியமானது.

ஓர் உண்மை பக்திமானின் வாழ்க்கை
யாக்கோபு 1:19-27

முன்னுரை

அ. யாக்கோபு 18ம் வசனத்தில் கூறியிருப்பதற்கும், 19-27 வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கற்பிக்கும் சத்தியங்களுக்கும், தொடர்பு உண்டு. தேவனுடைய ஆவியினால் பிறந்த மக்கள்:

1. ஆண்டவருடைய வார்த்தைகளை (கிறிஸ்துவின் சன்மார்க்க போதனைகளை) ஏற்றுக்கொள்வார்கள்.

2. 2. தேவ வசனம் கூறுவதின்படி செய்வார்கள்

3. சன்மார்க்க ஜீவியத்தில் பரிசுத்தமுள்ளவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் இருப்பார்கள்.

3. I. ஓர் உண்மை பக்திமான் தேவ வசனங்களை ஏற்றுக்கொள்வான். (யாக்கோபு 1:19-21).

அ. வசனம் - 19. "ஆகையால் என் பிரியமான சகோதரரே" என்று பழைய திருப்புதல் வேதம் கூறுகிறது. சுவிசேஷத்தால் மீட்கப்பட்டவர்களாகிய நாம், பேசும் வார்த்தைகள் அடக்கமானதாக இருக்கவேண்டும்விசுவாசிகள் இதை ஏற்கனவே அறிந்திருக்கவேண்டும்.

வசனம் - 19. "யாவரும் கேட்பதற்கு தீவிரமாய்... இருக்கக் கடவர்கள்." "தீவிரமாய்" என்பது, உடனே அல்லது எல்லா நேரங்களிலும் ஆயத்தமாய் இருக்கவேண்டும்

ஆ. கிறிஸ்தவவாழ்க்கையில் நடைமுறை காரியங்களையும், எச்சரிப்புகளையும் குறித்த, சுவிசேஷச் செய்தியை கூற அனுப்பப்பட்ட போதகர்களுக்கு செவிசாய்க்க வேண்டும்.

இ. வசனம் - 19. "பேசுவதற்குப் பொறுமையாயும்,கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக் கடவர்கள்." இன்றைய உலகத்தில், "ஒரு வார்த்தைக்கும் மாறுத்தரவு கூறப்படாமல் இருக்கக்கூடாது;உன் மனதில் உள்ளவற்றைக் கூறிவிடுஉன்கோபஉணர்ச்சிகளை வெளிப்படுத்திவிடு" என்று ஊக்கப்படுத்தப் படுகிறார்கள்.ஆனால் வேதம் இவ்வாறு கூறுகிறது:

1."தன்வார்த்தைகளில்பதறுகிற மனுஷனைக்கண்டாயானால்,அவனை நம்புவதைப்பார்க்கிலும்,மூடனைநம்பலாம்" (நீதிமொழிகள் 29:20).

2."உன்மனதில்சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே" (பிரசங்கி 7:9).

ஈ. வசனம் - 20."மனுஷனுடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே" யாக்கோபு இவ்வாறு கூறுதற்குக் காரணங்கள் எவை?

1. கோபம் இருதயத்தில் உள்ள பகையை வெளிப்படுத்துகிறது. 2.கோபஉணர்ச்சிகள் வெளிப்படும்போது அடக்கக் கூடாததாகவும், அளவுக்கு மிஞ்சியும் பொங்கி எழுந்து, ஒரு மாறுபட்ட நடத்தையை உருவாக்குகிறது. 3. பொங்கி எழும் அடக்கப்படாத கோபத்தையும், பொல்லாப்பானவற்றையும், தேவன் நியாயம் தீர்த்து தண்டிப்பார் என்ற உண்மையை உணர தருணம் இல்லாமல் போய்விடுகிறது. (யாக்கோபு 5:7-9; ரோமர் 12:19).

ஓர் உண்மை
பக்திமானின் வாழ்க்கை
யாக்கோபு 1:19-27

4. முக்கியமாக யாக்கோபுக்கு, "கோபம்" கொள்வது இயேசு கிறிஸ்துவின் போதனைக்கு, முற்றிலும் பொருந்தாத ஒன்றாகும். (மத்தேயு *5:22,39*).

உ. ஒரு மீட்கப்பட்ட இருதயத்தைக் காட்டக் கூடிய வார்த்தைகளையே ஒரு உண்மை பக்திமான் பேசுவான். அவன் அன்பும், ஊக்கமும் தரும் வார்த்தைகளையே பேசுவான். அந்த வார்த்தைகள், கேட்கிறவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையைக் கட்டி பயப்படுத்தும் அந்த வார்த்தைகள் மக்களைக் கிறிஸ்துவண்டை இழுக்கும். அப்படிப்பட்டவன்:

1. தன் வாழ்க்கையில் எல்லா அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிடுவான்.

2. தன்னில் விதைக்கப்பட்ட தேவ வசனங்களை ஏற்றுக்கொள்வான்.

ஊ. வசனம் - 21. "எல்லாவித அழுக்கையும், கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு" என்றால் துர்க்குணத்தை விட்டுவிடுவது, விலக்கிவிடுவது, தள்ளிவிடுவது.

1. உன் வாழ்க்கையில் உள்ள துர்க்குணம் இன்னதென்று அறிந்து கொள்ளவேண்டும்.

2. உன் பாவங்கள் நியாயமானவைகளே என்று உன்னையே தேற்றிக்கொள்வதை விட்டுவிட வேண்டும்.

3. உன் வாழ்க்கையில் நுழைய இருக்கும் பாவங்களைத் தடுத்து விடவேண்டும்.

எ. இந்த வார்த்தைகள் எபிரெயரில் காணப்படும் வார்த்தைகளுக்கு ஒத்தது. "பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும், தள்ளிவிட்டு...... இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். (எபிரெயர் 12:1). ஒரு நல்ல உதாரணம்: "இவன் மேல் இருக்கிற அழுக்கு வஸ்திரங்களைக் களைந்து போடுங்கள்" என்று எருசலேம் திரும்பக் கட்டப்பட்டபோது, யோசுவாவைக் குறித்து கூறப்பட்டுள்ளது. (சகரியா *3:1-9*).

ஏ. வசனம் - 21. "உங்கள் உள்ளத்திலே நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை, இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்." "வார்த்தை" என்பது கிறிஸ்துவின் சன்மார்க்க போதனையாகும். "நாட்டப்பட்டதாயும்" என்பது மனதிற்குள், இருதயத்திற்குள் பதிக்கப்படுகிறது. கிறிஸ்துவின் வசனங்களைக் கேட்பது மட்டும் போதாது. இந்த வசனங்கள், விசுவாசியின் இருதயத்திற்குள் ஏற்றுக்கொள்ளப் பட்டு, அவன் குணநலப் பண்பாக மாறவேண்டும். மெய்யாகவே மனந்திரும்பி இரட்சிக்கப்பட்ட ஒருவன், கிறிஸ்துவின் போதனைகளையும், அவரது குணநல பண்புகளையும், பிரதிபலித்து, தன்னில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவரை தன் அனுதின வாழ்க்கையில் வெளிப்படுத்துவான்.

II. உண்மையான பக்திமான் திருவசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவனாய் இருப்பான். (யாக்கோபு *1:22-25*).

அ. வசனம் - 22. "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு, திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" இப்படி செய்யாதவன்:

ஓர் உண்மை
பக்திமானின் வாழ்க்கை
யாக்கோபு 1:19-27

1. கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்கிறான்.

2. திருவசனத்திற்கு ஒத்த வாழ்க்கை நடத்துவதில்லை.

3. அவன் தான் இரட்சிக்கப்பட்டதாக நினைத்துக் கொள்கிறான்.

4. சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறான்.

மெய்பாகவே இரட்சிக்கப்பட்ட ஒருவன், தன் இருதயத்தில் நாட்டப்பட்ட திருவசனத்தின்படியே வாழ்க்கையை நடத்துகிறான்.

ஆ. வசனம் - 23, 24. “திரு வசனத்தைக் கேட்டும் அதன்படி செய்யாதவன்” இவன் சாத்தானால் வஞ்சிக்கப்படுகிறான். அவன் கண்ணாடியிலே, தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாய் இருப்பான். அவன் தன்னைத் தானே பார்த்து, அவ்விடம் விட்டு போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்து விடுவான். இப்படிப்பட்டவன் கிறிஸ்துவின் கற்பனைகளைக்கேட்கும்போது:

1. அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

2. அங்கிருந்து சென்றவுடனே, தான் கேட்டவைகளை மறந்துவிடுவான்.

3. தான் கேட்ட வசனத்தின்படி வாழமாட்டான். தன் சுபாவமுகத்தைக் கண்ணாடியில் பார்த்து எவ்வாறு மறந்து விடுவானோ, அவ்வாறே கிறிஸ்துவின் போதனைகளையும் தன் வாழ்க்கையில் காட்ட மறந்து போவான்.

இ. ஒருவன்:

1. ஆராதனைகளில் பங்கெடுத்து,

2. கிறிஸ்துவின் போதனைகளைக் கேட்டு,

3. மார்க்க சம்பந்தமான சடங்காச்சாரங்களையும், பாரம்பரையான பக்திக்கடுத்த பழக்கவழக்கங்களையும் செய்து, (தசமபாகம் கொடுத்தல், ஞானஸ்நானம் எடுத்தல், திருவிருந்தில் பங்கெடுத்தல்),

4. இக்காரியங்கள் தன்னை ஒரு மெய் கிறிஸ்தவனாக மாற்றும் என்று எண்ணினால் அது வருந்தத்தக்க தவறாகும். இவற்றோடு கிறிஸ்துவின் சன்மார்க்க போதனைகளின்படியே நடக்கவும் வேண்டும்.

ஈ. வசனம் - 25. “சுயாதீன பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவன்”

இவன்:

1. கிறிஸ்துவின் திருவசனத்தையும், பக்திக்கடுத்த போதனைகளையும் கேட்கும்போது அதற்கு தனி கவனம் செலுத்துகிறான்.

2. தான் கேட்டவற்றை மறக்கமாட்டான்.

3. தொடர்ந்து தன் வாழ்க்கையில், தான் கேட்ட வசனங்களின்படி நடப்பான்.

ஓர் உண்மை பக்திமானின் வாழ்க்கை
யாக்கோபு 1:19-27

இப்படிப்பட்டவன்:

1. "சுயாதீனமடைவான்" (விடுதலையடைவான்). அவன் இயேசுவின் வார்த்தையினால், நியாயம் விசாரிக்கப்படான். ஏனெனில் அவன் அந்த வார்த்தையின்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டான். (யோவான் 12:48, 8:31-32; யாக்கோபு 2:12).

2. "தன் செய்கையில் பாக்கியவானாய் இருப்பான்." அவனை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டவனாக இருப்பான். அவன் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையிலும், நித்தியமாக கிறிஸ்துவின் சமூகத்தில், நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் நம்பிக்கையிலும் களிகூருவான்.

III. மெய்பக்தன் பரிசுத்தமாகவும், குற்றமற்றவனாகவும் இருப்பான். (யாக்கோபு 1:26-27).

அ. வசனம் - 26. "ஒருவன் தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால்" யாக்கோபு இங்கு மார்க்க சம்பந்தமான வழிபாடுகளை மட்டும் அனுசரிக்கிற ஒருவனையும், உண்மை பக்தனையும், ஒப்பிட்டுக் கூறுகிறார். அநேகர் கோவிலுக்குச் செல்தல், மார்க்க சம்பந்தமான சடங்காச்சாரங்களைக் கைக்கொள்தல், பக்தியுள்ள ஆராதனை, மார்க்க சம்பந்தமான பாரம்பரை வழிபாடுகள், பழக்கவழக்கங்கள் முதலியன பக்திமார்க்கம் என்று நினைக்கின்றனர். இது பக்தி வேஷமே ஒழிய வேறல்ல.

ஆ. வசனம் - 26. "தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால்,

அவனுடைய தேவபக்தி வீணாயிருக்கும். "வஞ்சித்து" என்பது ஏமாற்றுவது. அதாவது தவறாக வழிவிலகிப் போதல். "வீணாயிருக்கும்" என்பது வெறுமையாக இருத்தல், பயனற்றதாய் இருத்தல், அல்லது விக்கிரகம் போல் இருத்தல். வெறும் சடங்காச்சாரங்களையும், மற்றும் வெளிப்படையான மத சம்பந்தமான, ஆராதனைகளை மட்டும் அனுசரிக்கும் ஒருவன், விக்கிரக ஆராதனைக்கொத்த மார்க்கத்திற்கு தவறாக வழிநடத்தப்படுகிறான். அவன் பக்தி வெறுமையானதாகவும், தேவனோடு தொடர்பு இல்லாத முழுவதும் பயனற்ற வழிபாடாகவும் இருக்கிறது.

இ. வசனம் - 27. "பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாய் இருக்கிறது. "சுத்தமான" என்பது இருதயத்தில் பரிசுத்தம் "மாசில்லாத" என்பது குற்றமற்ற நடத்தை எனப்படும். ஆகவே உண்மை பக்திமான், இருதய சுத்தமுள்ளவனாகவும், ஆவியில் உலகத்தால் கறைப்படாதவனாகவும் இருப்பான்.

ஈ. வசனம் - 27. உண்மை பக்திமான் ஒருவன்:

1. தன் நாவைக் கடிவாளத்தால் அடக்கி வைப்பான். அதாவது கோபத்தால் பொங்கி எழாமலும், குறைகூறாமலும், குற்றம் காண்கிறதும், மற்றும் விருதாவாக வம்பு பேசி, மற்றவர்களுக்கு துன்பம் கொடுக்கவோ, மனதில் காயம் உண்டாக்கவோ அல்லது மனபாரத்தை ஏற்படுத்தவோ மாட்டான். இப்படிப்பட்டவன் கிறிஸ்துவின் ஆளுகைக்குள் கொண்டுவரப்பட்ட இருதயத்தை வெளிப்படுத்துகிறான்.

2. நற்கிரியைகளை நடப்பிக்கிறான் - திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகின்ற உபத்திரவத்திலே, அவர்களை விசாரிப்பது, நற்கிரியைகளுக்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு - இதுவே ஓர் உண்மை பக்திமானின் வாழ்க்கையின் ஓர் பாகமாகும்.

ஓர் உண்மை பக்திமானின் வாழ்க்கை யாக்கோபு 1:19-27

உ. இப்படிப்பட்டவனைக்குறித்து, யாக்கோபு

1) "அவன் உண்மையாகவே தேவனை நேசிக்கிறான் என்றும்,

2) மறுபிறப்பில் தேவனுடைய ஆவியினால் மாற்றப்பட்டிருக்கிறான் என்றும்,

3) கிருபையில் தொடர்ந்து நிலைத்திருக்கிறான் என்றும் கூறுகிறார்.

முடிவுரை

அ. ஓர் உண்மை பக்திமான், தன் இருதயத்திலும், மனதிலும் கிறிஸ்துவின் சன்மார்க்க போதனைகளை பதித்துக் கொள்கிறான். இந்த போதனைக்களுக்கு ஒத்ததான ஓர் வாழ்க்கை நடத்துகிறான். கிறிஸ்தவ ஒழுக்க நெறியில் வாழாமல் இருந்துகொண்டு, ஆராதனை ஒழுங்குகளை மட்டும் கடைபிடித்து வாழ்பவர்கள், கிறிஸ்துவின் கிருபையினின்று விழுந்து விட்டார்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

ஆ. மாயமான பக்தியுள்ள சிலரிடம், தேவன் இன்று இவ்வாறு கூறுகிறார், "கிறிஸ்துவின் போதனைகளின்படி நடக்கவில்லை என்று உனக்கே தெரியும். உன் நாவிற்குக் கடிவாளம் கிடையாது. நீ கோபப்பட்டு மற்றவர்களுக்குக் கஷ்டத்தையும், துக்கத்தையும் கொடுக்க விரும்புகிறாய். உனக்கு மற்றவர்களிடம் எந்த ஒரு கருணையும் கிடையாது."

இ. நீ, மறுபடியும் நித்தியகிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருந்து, மிகுந்த சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள விரும்பினால், நீ உன் பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும். நீ இயேசுவுக்கு முன் உன்னைத் தாழ்த்தி, கிருபையினின்று விழுந்து விட்டேன் என்று அறிக்கையிட்டால், இயேசு உன் பாவத்தை மன்னித்து, அவர் ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் கீழ் உன்னைக் கொண்டு வருவார்.

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே பட்சபாதமாக இருத்தல் (யாக்கோபு 2:1-13)

முன்னுரை

அ. முதலாம் அதிகாரத்தில், யாக்கோபு பரீட்சைகளினாலும், சோதனைகளினாலும் ஏற்படும் நன்மைகள், அதன் வளரும் தன்மை, அதை மேற்கொள்வதால் கிடைக்கும் பரிசு பற்றி கூறுகிறார். அத்துடன், ஓர் உண்மை பக்திமான், தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு அதன்படி நடந்து, பரிசுத்தமாகவும், குற்றமற்றவனாகவும் இருப்பான் என்று கூறுகிறார்.

ஆ. இரண்டாம் அதிகாரத்தில் விசுவாசிகள் மத்தியில் காணப்படும் பட்சபாதமான நடத்தையைக் குறித்து தொடர்ந்து இவ்வாறு கூறுகிறார். 1) விசுவாசிகள் பட்சபாதகமாக இருக்கக் கூடாது. 2) ஒருவருக்கு பட்சபாதமாக தயவு காட்டுவதற்காக தரித்திரரைக் கனவீனம் பண்ணக்கூடாது. 3) பட்சபாதமாக இருத்தல் பாவமாகும். 4) பட்சபாதமாக இருப்பீர்களானால் மீறினவர்களென்று நியாயம் தீர்க்கப்படுவீர்கள்.

I. ஐசுவரியவானுக்கும், தரித்திரனுக்கும் இடையே விசுவாசிகள் பட்சபாதகமாக இருத்தல் கூடாது (யாக்கோபு 2:1-4).

அ. வசனம் - 1. "விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக" நாம் பட்சபாதமுள்ளவர்களாய் இருக்கும்போது, மனிதர்களிடையே நாம் விரும்பியவர்கள் பக்கமாகவே தயவு பாராட்டுவோம். வெளிப்படையாக நம் பட்சபாத நடவடிக்கை காணப்படும்.

ஒருவரைவிட மற்றொருவருக்கு அதிக மரியாதை செலுத்துவோம். அதிக அதிகாரமுடையோருக்கு பயந்து, அநியாயத்தை எதிர்க்க தவறிவிடுவோம்.

ஆ. வேதம் இவ்வாறு கூறுகிறது:

1. தேவனிடத்தில் பட்சபாதமில்லை (ரோமர் 2:11).

2. "அவர்களுக்கும், உங்களுக்கும் (எஜமான், அடிமை ஆகிய இருவருக்கும்) எஜமானானவர், பரலோகத்தில் இருக்கிறார் என்றும், அவரிடத்தில் பட்சபாதமில்லை" (எபேசியர் 6:9).

3. "உன் தேவனாகிய கர்த்தர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல" (உபாகமம் 10:17).

4. தேவன் பட்சபாதமுள்ளவர் அல்ல. அவர் எந்த பாவியையும், யாராக இருந்தாலும், கிறிஸ்துவின் மூலமாக வருகிற யாவரையும் ஏற்றுக் கொள்கிறார். (அப்போஸ்தலர் 10:34).

இ. இக்காரணங்களினால் கிறிஸ்துவில் விசுவாசம் வைத்த, கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாகிய ஒரு விசுவாசி பட்சபாதமாக இருத்தல் பொருத்தமானதன்று. வேதம் இதை திட்டவட்டமாகக் கூறுகிறது.

1. நியாயத்திலே முகதாட்சண்யம் பாராமல், பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலச், சிறியவனுக்கும் செவி கொடுக்கக் கடவீர்கள். (உபாகமம் 1:17).

2. "நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள். சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயம் தீர்ப்பாயாக" (லேவியராகமம் 19:15).

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே பட்சபாதமாக இருத்தல் (யாக்கோபு 2:1-13)

3. "வழக்கிலே நீதிமானைக் தோற்கடிக்கிறதற்கு துன்மார்க்கனுக்கு முகதாட்சிணியம் பண்ணுவது நல்லதல்ல" (நீதிமொழிகள் 18:5).

ஈ. வசனம் - 2,3. "ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரமும் தரித்திருக்கிற மனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும் போது...." யாக்கோபு, தன் கூற்றை நிரூபிக்க, சபையில் நடைமுறையில் நடக்கிற காரியத்தைக் கூறுகிறார். இது ஐசுவரியவான், தரித்தரன் என்ற இரண்டு வித்தியாசமான மனிதர்களைப் பற்றியது. பணக்காரன் கனம் பண்ணப்படுகிறான். அவன் ஆலயத்திலுள்ள மேன்மையான இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறான். அவன் மிக முக்கியமானவனாகக் கருதப்படுகிறான். அவன் கோபம் அடையும்படி நடத்தக்கூடாது. ஆனால் அந்த ஏழை மனிதன் ஆலய ஆராதனையில் நின்று கொண்டிக்கவேண்டும் அல்லது கீழே தரையில் உட்கார வேண்டும் (அதாவது தாழ்ந்த இடத்தில் உட்காரவேண்டும்)

உ. வசனம் - 4. "தகாத சிந்தைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா?" நீங்கள் மற்ற சக விசுவாசிகளிடம் தொடர்பு கொள்ளும்போது, பட்சபாதமாக நடந்து கொள்வீர்களானால், உங்கள் நீதி பொல்லா சிந்தனைகளையே அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். இப்படிப்பட்ட நீதி, பிசாசினால் தூண்டப்பட்டதும், உலக வழிபாடுகளின் மேன்மையை சார்ந்ததுமாய் இருக்கும். "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு, மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (மத்தேயு 7:1) என்று கிறிஸ்து கூறியிருக்கும்போது, பட்சபாதமாக இருத்தல், கிறிஸ்துவின் இந்த பிரமாணத்தை மீறுவதாகும்.

ஊ. வெளித்தோற்றம், ஐசுவரியம், கல்வி, சமுதாயத்தில் ஒருவரின் நிலை ஆகிய இவற்றின் அடிப்படையில் பட்சபாதம் காட்டுவது குறித்து விசுவாசிகளும், போதகர்களும், மற்றும் சபைத் தலைவர்களும் எப்பொழுதும் ஜாக்கிரதையாக (விழிப்பாக) இருக்க வேண்டும். பட்சபாதமாக இருக்கக் கூடாது. அது நல்லது அல்ல. இது ஆவியில் பின்வாங்கின சபையைக் குறிக்கும். தரித்திரர், மற்றும் ஆவியில் எளிமையுள்ளவர்கள் மத்தியில் சுவிசேஷம் பரவுவதைத் தடுக்கும். இன்றைய சபையில் கீழ்க்கண்ட காரியங்களைக் காணும்போது, இது வெளிப்படையாக தெரிவதைத் தான் காண்கிறேன்:

1. விசேஷ கூட்டங்களுக்கு மட்டும் கோவிலுக்கு வருதல்.

2. சமூக விழாக்களுக்கு சபை அங்கத்தினர் வீடுகளுக்குச் செல்தல்.

3. சபையின் விசேஷ கூட்டங்களுக்கும், ஆட்சிக் குழுக்களுக்கும், அங்கத்தினரை நியமிப்பதற்கும், தேர்ந்தெடுப்பதற்கும் பின்பற்றும் முறைகள்

4. சபைக்கும் அதன் ஊழியங்களுக்கும் ஏற்ற ஆலோசனைகளையும், நல்ல யோசனைகளையும் கொடுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதும்.

II. நீங்கள் ஐசுவரியவானுக்கு தனி தயவு பாராட்டுவீர்களானால், தரித்திரரை கனவீனம் பண்ணுகிறீர்கள். (யாக்கோபு 2:5-7).

அ. வசனம் - 5. "உலகத்தின் பார்வையில் தரித்திரராகக் காணப்படுவர்;

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே பட்சபாதமாக இருத்தல் (யாக்கோபு 2:1-13)

திருச்சபையில் விசுவாசிகளில் அநேகர் தரித்திரர் (1கொரிந்தியர் 1:26). எருசலேமின் சபை அங்கத்தினர்கள் மிகவும் தரித்திரர். இருந்தாலும் தரித்திரரை, ஐசுவரியவான்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது அவர்கள்:

1. விசுவாசத்தில் ஐசுவரியவான்கள். (மத்தேயு 19:23, 24, 13:22; 1தீமோத்தேயு 6:9-10).

2. ஆண்டவருடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிப்பவர்கள். (லூக்கா 4:18, 6:20; மத்தேயு 5:3).

3. ஐசுவரியமுள்ள வாலிபன் திரும்பி, கிறிஸ்துவைவிட்டு விலகிப் போய்விட்டான். (மத்தேயு 19:22). உலகத்தில் உள்ள ஐசுவரிவான்களில் அநேகர் அவ்விதமே இருக்கிறார்கள்.

ஆ. இவ்வுலகத்தில் உள்ள தரித்திரர், வரப்போகிற உலகத்தைக் குறித்து, ஐசுவரியவான்களைவிட அதிக வாஞ்சையாய் இருக்கிறார்கள். ஏனெனில்,

1. இந்த உலகத்தின் நம்பிக்கைகளையும், மாயைகளையும் குறித்து அக்கறை காட்டுவதில்லை.

2. மிகக் கடினமான உபத்திரவங்களுக்கும், கஷ்டங்களுக்கும் மத்தியில் தொடர்ந்து வாழ்கிறார்கள். ஆகவே யாக்கோபு இவ்வாறு கூறுகிறார், "ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன் (யாக்கோபு 1:10).

இ. வசனம் - 6. "நீங்கள் தரித்திரரைக் கனவீனம் பண்ணுகிறீர்கள்" சில விசுவாசிகள், தரித்திரரோடு தொடர்பு கொள்வது தங்கள் அந்தஸ்திற்குத் தாழ்வானதுபோன்று தரித்திரரை நடத்துகின்றனர். அவர்களை சமுதாயத்தில் மோசமான நிலையில் உள்ளவர்களை நடத்துவது போல நடத்துகின்றனர். அவர்கள் தரித்திரரிடம் கடினமாகவும், கேவலமாகவும், அன்பற்ற விதமாகவும் நடந்து கொள்கின்றனர்.

ஈ.வசனம்- 6-7. "ஐசுவரியவான்களல்லவோ, உங்களை ஒடுக்குகிறார்கள்? உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்? உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை தூஷிக்கிறார்கள்?"விசுவாசிகள் சுவரியவான்களுக்குதனி தயவு ஏன் பாராட்டவேண்டும்? இந்த உலகத்தின் ஐசுவரியவான்கள் தங்களுக்கு என்ன செய்தார்கள் என்பதை ஆதி சபை விசுவாசிகள் மறந்து விட்டனரா? ஐசுவரியவான்கள்:

1. அவர்களை ஒடுக்குகிறார்கள் - அவர்கள் கட்டி தீர்க்கமுடியாத மிகுந்த கடன் தொகைக்கு வட்டி வாங்குவதற்கு.

2. அவர்களை நியாயாசன முன் இழுக்கிறார்கள். ஏனெனில், அவர்களால் கடனை திரும்ப செலுத்த முடியவில்லை. ஆதிகாலத்தில் கடன் கொடுத்தவன், கடன் பட்டவனைப் பிடித்து நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்கிறான்.

3.கிறிஸ்துவின் நாமத்தை தூஷிக்கிறார்கள் - அவர்களுடைய நன்நடத்தைக்கு அவதூறு உண்டாக்குவதற்கும், கெடுப்பதற்கும், ஐசுவரியவான்கள் கிறிஸ்துவைக் குறித்து சன்மார்க்கமாய் பேசுகிறார்கள்.

உ கிறிஸ்துவின்நாமத்தை தூஷிக்கிறவர்களுக்கும்அவர்களை நியாயானசங்களுக்கு முன் இழுக்கிறவர்களுக்கும், கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்தவர்களை தூற்றித் திரிகிறவர்களுக்கும்,

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே பட்சபாதமாக இருத்தல் (யாக்கோபு 2:1-13)

ஒருவர் ஏன் பட்சபாதமாக நடக்க வேண்டும்? அவர்கள் ஐசுவரியவான்களோடு அறிமுகமாக விரும்புவதால் இவ்வாறு செய்கிறார்கள். அவர்கள் இந்த உலகத்தின் சம்பத்தை வாஞ்சிப்பதாலும், அதன் புகழ்ச்சியையும், மேன்மையான அந்தஸ்தையும், உலகத்தில் ஐசுவரியவான்களுக்குரிய அதிகாரத்தையும் விரும்புவதாலே அவ்வாறு பட்சபாதமாக இருக்கிறார்கள்.

III. "பட்சபாதமுள்ளவர்களாய் இருப்பீர்களானால், பாவம் செய்து மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள் (யாக்கோபு 2:8-11).

அ. வசனம் - 8. "உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகின்ற இராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மை செய்வீர்கள், (யாக்கோபு 2:8). அன்பின் பிரமாணம் "இராஜரீகம்" என்று அழைக்கப்படுகிறது.

ஏனெனில் இதுவே ஒரு மனிதன், அயலானோடும், தேவனோடும் கொண்டுள்ள தொடர்பிற்கு அடிப்படையான உன்னத சட்டமாகும். (லேவியராகமம் 19:18; உபாகமம் 6:5; மத்தேயு 22:37-40). இந்த இராஜரீக பிரமாணத்தின் அடிப்படையிலே, பழைய ஏற்பாட்டின் வேதவசனங்கள் யாவும் சார்ந்துள்ளது. (ரோமர் 13:10).

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில், உன் முழுமனதோடும், முழுஆத்துமாவோடும் அன்புகூர்ந்து, உன்னிடத்தில் அன்பு கூருவது போல் அயலானிடத்திலும் அன்பு கூருவதே தேவனுடைய "இராஜரீக" பிரமாணமாகும். இவ்வாறு நடந்தால் நீ நன்மை செய்கிறாய்.

ஆ. வசனம் - 9. "ஆனால் பட்சபாதமுள்ளவர்களாய் இருப்பீர்களானால், நீங்கள் பாவம் செய்கிறீர்கள்; விசுவாசிகள், ஐசுவரியவான்களிடம் பட்சபாதமாக நடப்பார்களானால், தேவனுடைய சன்மார்க்க பிரமாணத்தை மீறுகின்றனர்.

இவர்கள்:

1. தங்கள் அயலார் யாவரையும் ஒன்றுபோல் அன்புகூருவது இல்லை.

2. ஐசுவரியவான்களையும் தரித்திரரையும் ஒரேவிதமாக நேசிப்பதில்லை.

3. ஐசுவரியவான்களையும், தரித்திரரையும் ஒன்றுபோல் நடத்துவதில்லை. இவர்கள் தேவனை துக்கப்படுத்துவதுடன், அவருக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிறவர்களாயும் இருக்கின்றனர்.

இ. வசனம் - 10,11. "ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாய் இருப்பான்" ஒருகற்பனையைக் கைக்கொள்ளும்போது தங்களுக்கு ஒரு எண் மதிப்பீடு கூடுகிறதென்றும், ஒரு கற்பனையை மீறும்போது, ஒரு எண் மதிப்பீடு குறைகிறதென்றும், அநேக இரட்சிக்கப்பட்ட யூதர்கள், இன்றும் கூறுகின்றனர். ஒருவனுடைய கூடுதல் மதிப்பீடு, குறைகிற மதிப்பீட்டைவிட அதிகமாயிருப்பின் தனக்கு சாதகமாக அதிக பட்ச நம்பிக்கை உண்டு என்று கருதுகின்றனர்.

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே பட்சபாதமாக இருத்தல் (யாக்கோபு 2:1-13)

இந்த போதனையை யாக்கோபு கடிந்து கொள்கிறார். ஏனெனில்,

1. ஒரே தேவன் தாமே எல்லா சன்மார்க்க பிரமாணங்களையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

2. அவர் பிரமாணங்களில் ஒன்றை மீறினாலும் அவருக்கு விரோதமாக கலகம் செய்கிறவர்களாகக் காணப்படுவோம்.

3. ஆகவே விபச்சாரம் (யாத்திராகமம் 20:14) செய்கிறவர்களும், கொலை (யாத்திராகமம் 20:13) செய்கிறவர்களும் தேவனுக்கு விரோதமாக, ஒரே விதமான பாவம் செய்து, குற்றவாளியாய் இருப்பார்கள்.

ஈ. இதே சட்டத்தில் தேவனுடைய எல்லா பிரமாணங்களும் சார்ந்திருக்கிறது. (மத்தேயு 23:23). ஐசுவரியவான்களுக்கு பட்சபாதமாக இருப்பவர்கள் கீழ்க்கண்ட பாவங்களைச் செய்தவர்களைப் போலவே, தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து குற்றவாளிகளாவார்கள்.

1. விக்கிரகங்களை உண்டாக்கி வணங்குபவர்கள்.

2. ஒரே தேவன் இருக்க வேண்டிய இடத்தில் பொய்யான தேவர்களை வைத்து மேன்மைப்படுத்துகிறவன்.

3. தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவன்.

4. ஓய்வுநாளை மதிக்காதவன்.

5. தகப்பனையும் தாயையும் கனம் பண்ணாதவன்.

6. கொலை அல்லது விபச்சாரம் செய்கிறவன்.

7. திருடி, இச்சித்து, பொய் சாட்சி கூறுபவன்.

IV. நாம் பட்சபாதமாக இருப்போமானால் நியாயம் தீர்க்கப்படுவோம் (யாக்கோபு 2:12-13).

அ. வசனம் - 12. "சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய், அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்" ஒரு கிறிஸ்தவன் பழைய ஏற்பாட்டின் சில வெளிப்படையான பிரமாணங்களைக் கொண்டு நடத்தப்படுகிறவன் அல்ல. அவன் தண்டனைக்குப் பயந்து அதன் அடிப்படையில், மற்றவர்களோடு பேசுவதிலும், தொடர்பு கொள்வதிலும் நடந்து கொள்வதில்லை. அவன் தனக்குள் வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவதினால், இராஜரீக பிரமாணமாகிய அன்பின் பிரமாணத்தில் வாழ்கிறான். அவன் ஐசுவரியவான், தரித்திரன் ஆகிய யாவரிடமும், கருணையோடு இருக்கிறான்.

ஆ. வசனம் - 13. "ஏனென்றால் இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கம் இல்லாத நியாயத்தீர்ப்பு கிடைக்கும். தரித்திரனிடம் இரக்கம் இல்லாமல், ஐசுவரியவானுக்கு இரக்கம் காண்பிக்கிறவனுக்கு தேவனிடம் இரக்கம் இல்லாத நியாயத்தீர்ப்பு கிடைப்பதே அதன் விளைவாகும். தரித்திரர், ஐசுவரியவான் ஆகிய யாவரிடமும் இரக்கமுள்ளவனிடம் தேவனும் இரக்கமுள்ளவராய் இருப்பார்.

ஐசுவரியவானுக்கும் தரித்திரனுக்கும் இடையே பட்சபாதமாக இருத்தல் (யாக்கோபு 2:1-13)

1. ஏழையின் கூக்குரலுக்கு தன் செவியை அடைத்துக் கொள்ளுகிறவன், தானும் சத்தமிட்டுக் கூப்பிடும்போது கேட்கப்பட மாட்டான் (நீதிமொழிகள் 21:13).

2. இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள் (மத்தேயு 5:7).

3. "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா, உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார். (மத்தேயு 6:14,15).

4. இரக்கம் காண்பிக்காத ஊழியனைக் குறித்த உவமையில் வரும் எஜமான், மன்னிக்க முடியாத ஊழியக்காரனை நோக்கி, "நான் உனக்கு இரங்கினது போல, நீயும் உன் உடன் வேலைக்காரனுக்கு இரங்க வேண்டாமா?" என்று கேட்டான். கண்டிப்பாக இரங்க வேண்டும் என்பதே பதிலாகும்.

இ. யாக்கோபு 2:13. "நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்" யாக்கோபு பட்சபாத நடக்கையை மனதில் வைத்து பேசுகிறார். விசுவாசிகள், தரித்திரருக்கும், ஐசுவரிவான்களுக்கும் ஒன்றுபோல் இரக்கம் காண்பித்தால், நியாயத்தீர்ப்பிற்கும், தண்டனைக்கும் பயப்பட வேண்டிய அவசியமில்லை. இந்த வாக்கியத்திற்கு இதுவே பொருளாகும்.

"அன்பிலே பயமில்லை பூரண அன்பு (யாவரிடமும் வேறு பாடில்லாமல்) பயத்தை (தெய்வீக நியாயதீர்ப்பைக் குறித்து) புறம்பே தள்ளும் (1யோவான் 4:18).

முடிவுரை

அ. விசுவாசிகள் ஐசுவரியவான், ஏழை என்ற வேறுபாடு காட்டி பட்சபாதமாக இருக்கக் கூடாது. பணக்காரனுக்கு சலுகை காட்டும்போது, ஏழை நிந்திக்கப்படுகிறான். இவ்வாறு பட்சபாதமாக இருப்பவன், தேவனுடைய சன்மார்க்க பிரமாணங்களை மீறுகிற பாவத்தைச் செய்பவனுக்கு சமமானவன் ஆகிறான். அவன் அவ்வாறு நடப்பதற்கு ஏற்ற நியாயத்தீர்ப்பை பெறுவான்.

ஆ. வேதம் இவ்வாறு கூறுகிறது. "கர்த்தர் எல்லா இருதயங்களையும் ஆராய்ந்து, நினைவின் தோற்றத்தையெல்லாம் அறிகிறார் (நாளாகமம் 28:9). "மனுஷனுடைய யோசனைகளைக் கர்த்தர் அறிவார்" (சங்கீதம் 94:11). உலகத்தில் ஐசுவரியவான்களுக்கும், உயர்ந்தவர்களுக்கும் நாம் ஏன் பட்சபாதமாக நடந்து கொள்கிறோம் என்று தேவன் அறிவார். ஆலயத்தில் இவ்வாறு நடக்கும் ஒவ்வொரு சம்பவத்தையும் அவர் பார்க்கிறார். அவர் அதில் பிரியமாய் இருப்பதில்லை. அது பாவம், அது நீக்கப்படவேண்டும். இல்லையென்றால், தேவனின் நியாயத்தீர்ப்பில் அது முடியும்.

விசுவாசமும் நற்கிரியைகளும் யாக்கோபு 2:14-26

முன்னுரை

அ. யாக்கோபு இந்த நிருபத்தை, உலகமுழுவதும் சிதறி இருக்கிற இரட்சிக்கப்பட்ட யூதர்களுக்கு எழுதுகிறார் (யாக்கோபு 1:1,2). அவர்களுக்கு பரம்பரையான ஒரு பக்திமார்க்கம் இருந்தபடியால், தங்கள் ஆத்தும இரட்சிப்புக்கு பக்தியோடு கூடிய மத சடங்காச்சாரங்களையே (வெளிப்படையான சமய ஒழுங்குகள்) சார்ந்திருந்தார்களேயன்றி, கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. யாக்கோபின் இந்த நிருபத்திலிருந்து அவர்கள் கிருபையின் சிலாக்கியத்தில் இருந்து விழுந்து விட்டார்கள் என்று அறிந்து கொள்ளலாம்.

1. அவர்கள் கிறிஸ்துவுக்கும், அவர் போதனைகளுக்கும் கீழ்ப்படிவதை விட்டு விட்டார்கள்.

2. தங்களுக்குள் தங்கி இருக்கும் பரிசுத்த ஆவியால் நடத்தப்படுவதை விட்டுவிட்டார்கள்.

3. கிறிஸ்துவை பின்பற்றுபவர்களிடம் காணப்படும் கிரியைகள், பின் ஒருபோதும் அவர்கள் வாழ்க்கையில் காணப்படவில்லை.

ஈ. இன்று நமது போதனை "விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" என்பது அல்ல. இது வேதவசனங்களில் துவக்கத்திலேயே, பவுல் அப்போஸ்தலன் மூலம் நன்கு உணர்ந்து விளக்கப்படுகிறது. (ரோமர் 1:17, 3:22, 9:30; கலாத்தியர் 5:2-6; எபேசியர் 2:8-9).

ஆ. இங்கு சமய சடங்காச்சாரங்களை மட்டும் கைக்கொள்ளுகிற, கிருபையினின்று விழுந்த விசுவாசிகளைப் பற்றி கூறப்பட்டுள்ளது.

இ. இவர்களுக்கு தேவனைப் பற்றிய அறிவுமட்டும் இருந்திருக்கும். கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் மதிப்பற்றதாகிவிடும். அது மாயையானதும், அவர்களை இரட்சிக்க வல்லமையற்றதுமாகிறது. அது பயனற்றதும், மரித்ததும், விக்கிரக ஆராதனைக்கு ஒப்பானதுமாகிறது.

I. கிரியை இல்லாத விசுவாசம் உன்னை இரட்சிக்காது (யாக்கோபு 2:14-17).

அ. வசனம் - 14. "ஒருவன் தனக்கு விசுவாசம்உண்டென்றுசொல்லியும், கிரியைகளில்லாதவனானால்அவனுக்கு பிரயோஜனமென்ன?" இந்த வேதவசனங்களில் யாக்கோபு "விசுவாசம்" என்று கூறும்போது அது கிறிஸ்துவின்மீதுள் இரட்சிக்க வல்ல மேன்மையான விசுவாசம் ஆகாது. அது:1. மத சம்பந்தமான ஒரு வகையாசத்திபங்கமைனதளவில் ஏற்றுக்கொள்வதாகும்.

2.அர்த்தமற்ற,வெளிப்படையான,மத சடங்காச் சாரங்களில் வெளிப்படுவது.

3.கிறிஸ்துவிற்கும்அவர் போதனைகளுக்கும் கீழ்ப்படிதலைவெளிப்படுத்தும்கிரியைகள் இல்லாதது.

ஆ. வசனம் - 14. "அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?" திட்டமாக "இல்லை" என்பதே பதிலாகும். இரட்சிக்கும் விசுவாசம் கீழ்க்கண்ட பண்புகளை உடையது.

விசுவாசமும் நற்கிரியைகளும் யாக்கோபு 2:14-26

1. "புதிய சிருஷ்டி" பழையது (மனிதன்) ஒழிந்து, புதியது (மனிதன்) தோன்றுகின்றது. நீ பாவசுபாவத்தாலும், சாத்தானினாலும், ஒரு காலத்தில் ஆளுகை செய்யப்பட்டாய். நீ தேவனுடைய ஆட்சிக்கும், அதிகாரத்திற்கும் கீழாவதினால், இனி ஒருபோதும் பாவ வாழ்வு வாழமாட்டாய்.

2. அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ஆகிய ஆவியின் கனிகள் உன் வாழ்வில், நித்தியமாக பெருமளவில் பெருகும். உன் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுவார். "ஆவியினால் நடத்தப்படுவாய்" (கலாத்தியர் 5:16, 18, 22-23).

3. உன் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் வல்லமை வெளிப்படும். மக்கள் உன் மூலமாக அற்புதமாக இரட்சிக்கப்பட்டு, உன்னால் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (அப்போஸ்தலர் 1:8; மாற்கு 16:20; 1கொரிந்தியர் 12:7-10, 28; ரோமர் 12:6-8; எபேசியர் 4:11).

4. உன் ஜீவனையே அவர்களுக்குக் கொடுக்கும் அளவிற்கு, மற்ற சகவிசுவாசிகளில் அன்பு கூருவாய்.

5. நீ மற்றவர்கள் சுவிசேஷ செய்தியைக் கேட்பதற்காக, உன்னையே அர்ப்பணித்து, உன் உயிரையும் தியாகம் செய்ய ஆயத்தமாய் இருப்பாய் (அப்போஸ்தலர் 1:8; ரோமர் 12:1, 8:36; மத்தேயு 10:39)

6. தேவனுடைய சமூகத்திலும், கிறிஸ்துவின் சமூகத்திலும் வாழும், நித்திய ஜீவனிலும், உயிர்த்தெழுதலிலும், தொடர்ந்து நம்பிக்கை வைக்க முடியும்.

. வசனம் - 15. "ஒரு சகோதரனாவது, சகோதரியாவது வஸ்திரமில்லாமலும், அனுதின ஆகாரமில்லாமலும் இருக்கும் போது" கிறிஸ்துவை அறியாத அல்லது வெகு தூரத்திலுள்ள விசுவாசியை எடுத்துக்காட்டாகக் காட்டினால், அந்த சூழ்நிலையை விளங்கிக் கொள்வது கடினம். ஆனால் அவ்வாறு ஒரு கடினமான சூழ்நிலையை எடுத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொரு வாரமும், உன் ஆலயத்தில், உன்னோடு சகவாசம் செய்யும் மற்றொரு விசுவாசியைக் குறித்துதான் கூறுகிறார்.

ஈ. இந்த சகவிசுவாசி:

1. இரவிலும், பகலிலும் குளிருக்குப் பாதுகாப்பான வஸ்திரம் இல்லாதவன்.

2. ஒன்றுக்கும் உதவாத கிழிந்த ஆடை அணிந்துள்ளான்.

3. அன்றாடக உணவு கிடைக்காத நிலையில் உள்ளான்.

உ. வசனம் - 16. "அவர்களை நோக்கி, நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால், பிரயோஜனமென்ன?" விடை வெளிப்படையானது. இது கொஞ்சமும் நல்லது அல்ல. இது ஒரு போதும் அவர் வாழ்க்கையில் எடுத்துக் காட்டப்படவில்லை. இது கிறிஸ்துவின் போதனைக்கு முற்றிலும் எதிர்மாறானது.

ஊ. வசனம் - 17. "விசுவாசமும் கிரியைகளில்லாமல் இருந்தால், தன்னில் தானே செத்ததாயிருக்கும்." மத சம்பந்தமான உண்மைகளை மனதளவில் ஏற்றுக்கொள்வதும், மத சடங்காச்சாரங்களை அடிப்படையாகக் கொண்ட விசுவாசம், செத்ததும், விக்கிரக ஆராதனைக்கு ஒப்பானதுமாகும். இதற்கு இரட்சிக்கிற விசுவாசத்திற்குரிய பண்புகள் இல்லை. போவான் இந்த வகையான விசுவாசத்தை இவ்வாறு கூறுகிறார்.

**விசுவாசமும்
நற்கிரியைகளும்
யாக்கோபு 2:14-26**

அவர்கள்:

1. மனதளவிலேயே சுவிசேஷத்தின் சத்தியங்களை ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

2. தங்கள் பக்தியை அர்த்தமற்ற மத சடங்காச்சாரங்கள் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

3. மற்ற விசுவாசிகளிடம் அன்பு காட்டுவது இல்லை.

4. ஆவியின் கனியோ, வல்லமையோ அவர்களிடம் காணப்பட மாட்டாது.

5. சுவிசேஷச் செய்தி உலகமெங்கும் பரவ தங்களை அர்ப்பணிக்க மாட்டார்கள். ஆகவே நாம் யாக்கோபோடு சேர்ந்து, "இந்த விசுவாசம் பொய்யானது, மரித்தது, இது அவர்களை இரட்சிக்க வல்லமை அற்றது" என்ற முடிவுக்கு வரலாம்.

II. கிரியை இல்லாத விசுவாசம் பயனற்றது (2:18-25) அ. வசனம் - 18 "உனக்கு விசுவாசம் உண்டு, எனக்கு கிரியைகளுண்டு." சிலர் "விசுவாச" கிறிஸ்தவர்களாகவும், சிலர் "கிரியை" கிறிஸ்தவர்களாகவும் இருக்கின்றனர் என்று கூறுகிறார்கள். இவர்கள் விசுவாசமும், கிரியையும் சுதந்திரமாகத் தனித் தனியே இருக்க முடியும் என்று கூறுகின்றனர். யாக்கோபு, இவ்வாறு இருக்கக் கூடும் என்பதை திட்டவட்டமாக மறுக்கிறார். இவ்விரண்டும் பிரிக்கக் கூடியது அல்ல.

ஆ. வசனம் - 19. "தேவன் உண்டென்று விசுவாசிக்கிறாய் .....பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. ஒரே தேவன் உண்டு என்பதை யூதர்கள் மனதளவில் தான் விளங்கி இருக்கிறார்கள் என்று யாக்கோபுக்குத் தெரியும். "இஸ்ரவேலே கேள், உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்" என்பது பரிசேய யூதர் தினம் இரண்டுமுறை, விசுவாசத்தை அறிக்கையிட்டு கூறும் ஜெபமாகும். (உபாகமம் 6:4-5).

இ. பிசாசுகளும் மனதளவில் இவ்வாறே தேவனை அறிந்திருக்கின்றன. (மாற்கு 1:24,5,7; அப்போஸ்தலர் 16:17, 19:15). அவை தேவனுக்கு விரோதமாக போராடுவதால், இந்த அறிவு அவைகளை பயந்து, நடுங்கவைக்கிறது.

தேவனை மனதளவில் அறிந்து, அறிக்கையிடுகிறவர்கள், பிசாசுகளை விட மேலானவர்கள் அல்ல. ஏனெனில் போதனைகளுக்குக் கீழ்ப்படியவும் நற்கிரியைகள் செய்யவும், தூண்டுகின்ற, இரட்சிக்கும் விசுவாசம், இவர்களிடம் கிடையாது.

ஈ. வசனம் - 20. "வீணான மனுஷனே" கிறிஸ்தவ விசுவாசத்தில், விசுவாசமும் கிரியைகளும், தனித்தனியே நிற்க முடியும் என்று கூறுகிறவர்களை எச்சரிக்கிறார். இவ்வாறு கூறுபவர்களை அவர் வெறுமையானவர்கள் என்று சொல்லுகிறார்வெறுமையான மனது, வெறுமையான காரங்கள், வெறுமையான இருதயம், அவர்கள் மதியற்றவர்களைப் போல் காணப்படுகின்றனர். அவர்கள் தேவனுக்கு விரோதமான துன்மார்க்கர்.

உ. வசனம் - 20-25. "வீணான மனுஷனே கிரியைகள் இல்லாத விசுவாசம் செத்ததென்று, நீ அறிய வேண்டாமா?" வேதத்தில் காணப்படும்

**விசுவாசமும்
நற்கிரியைகளும்
யாக்கோபு 2:14-26**

இரண்டு சம்பவங்களைக் கூறி, யாக்கோபு தன் கூற்றை விளக்குகிறார். 1) ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை பலிபீடத்தில் செலுத்தினது. 2) ராகாப் என்ற வேசி தூதர்களை ஏற்றுக்கொண்டு, வேறு வழியாய் அனுப்பினது.

1. ஆபிரகாம் தேவனுக்கு முன்பாக நீதிமானாகக் காணப்படுகிறான் (நீதிமானாக்கப்பட்டான்). ஏனெனில் அவன் தேவனை விசுவாசித்தான். வேதம் இவ்வாறு கூறுகிறது, "அவன் கர்த்தரை விசுவாசித்தான், அதை அவர் அவனுக்கு நீதியாக எண்ணினார்" (ஆதியாகமம் 5:6). ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கை, பலிபீடத்தில் பலியாகச் செலுத்தியபோது, ஆபிரகாமின் விசுவாசம் வெளிப்பட்டது. உண்மையாக நீதிமானாக்கப்பட்ட ஒருவன் (தேவனுக்கு முன்பாக, கறையற்றவனாக இருந்து நீதிமானாக்கப்பட்டான்), தன் விசுவாசம், மேன்மையான இரட்சிப்பிற்குரியது என்பதை தன் கிரியைகள் மூலம் நிரூபிப்பான்.

2. ராகாப் என்ற வேசியின் விசுவாசமும், அவள் கிரியை மூலம் வெளியாக்கப்பட்டது. அவள் வேவுகாரரை ஒளித்து வைத்து, அவர்கள் தப்பிச் செல்லும்படியாக வேறு வழியாய் அனுப்பிவிட்டாள் (யோசுவா 2).

ஊ. "விசுவாச" கிறிஸ்தவர்கள் "கிரியை" கிறிஸ்தவர்கள் என்று எங்கும் கிடையாது. கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தால் ஒருவன் செய்யும் நற்கிரியைகளே, அவனிடத்தில் விசுவாசம், மேன்மை உள்ளது என்பதை வெளிப்படுத்தும் ஒருவன் விசுவாசம் மூலமாகவோ, கிரியை மூலமாகவோ இரட்சிக்கப்படக்கூடும் என்பது தவறான, பிசாசினால் தூண்டப்பட்ட போதனையாகும். அநேகரைக் கிறிஸ்துவை விட்டு விலகிச் செல்வதற்கும் அடிமைத்தனக் கட்டிற்குள் வைப்பதற்கும் போதிக்கப்படுவதாகும்.

எ. ஒருவன் விசுவாசத்தால் இரட்சிக்கப்படுகிறான், இந்த இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் அப்பொழுது நற்கிரியைகளில் வெளிப்படும்.

1. பாவம் செய்கிறவர்கள் இனிமேல் பாவம் செய்யமாட்டார்கள். அவர்கள் நீதியுள்ள வாழ்க்கை வாழ்வார்கள்.

2. ஆவியின் கனிகள் அவர்கள் வாழ்க்கையில் காணப்படும்.

3. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மற்றவர்களை கிறிஸ்துவிடம் நடத்தி, நற்கிரியைகள் பல செய்வார்கள்.

4. சக விசுவாசிகளை தங்கள் முழு இருதயத்தோடும் நேசிப்பார்கள்.

5. சுவிசேஷம் பரவ தங்களை அர்ப்பணித்துக் கொள்வார்கள்.

6. வானத்தில் கிறிஸ்து வெளிப்பட போவதையும் உயிர்த்தெழுதல் உண்டென்பதையும் எப்பொழுதும் நம்பிக் கொண்டிருப்பார்கள்.

ஏ. கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் பவுல் அப்போஸ்தலன் இவ்வாறு கூறுகிறார். "அன்பினால் கிரியைசெய்கிற விசுவாசமே உதவும்" (கலாத்தியர் 5:6). மறுபடியும் "நன்மை செய்வதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக .... ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும் நன்மை செய்யக் கடவோம்; எபேசியரில் இவ்வாறு கூறுகிறார்

**விசுவாசமும்
நற்கிரியைகளும்
யாக்கோபு 2:14-26**

நற்கிரியைகளைச் செய்வதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாய் இருக்கிறோம். (எபேசியர் 2:10).

III. கிரியை இல்லாத விசுவாசம் செத்தது *(2:26).*

அ. "ஆவியில்லாத சரீரம் மரித்தது" மரிப்பது என்பது பிணமாகிவிடுவது. ஆவி மாம்சீக சரீரத்தை விட்டு போய் விட்டது. அதில் இனி ஜீவன் இல்லை. இருதயம் இரத்த ஓட்டத்தை நிறுத்திவிடுகிறது. மனது வேலை செய்வதை நிறுத்தி விடுகிறது. சரீரம் அழுக ஆரம்பிக்கிறது.

ஆ. "கிரியை இல்லாத விசுவாசம் செத்தது." எவ்வாறு ஆவி இல்லாத சரீரம் செத்ததாக இருக்கிறதோ, அவ்வாறே, நற்கிரியைகள் இல்லாத விசுவாசமும், செத்ததாய் இருக்கிறது. அந்த மனிதனின் ஆவிக்குரிய சரீரம் மரித்து விடுகிறது. அவன் தேவனுக்கு முன்பாகக் களங்கமற்றவனும் நீதிமானுமாக இல்லை. ஒரு காலத்தில் அவன் இரட்சிக்கப்பட்டிருந்தாலும்,அவன் கிருபையினின்று விழுந்து விட்டான்.

இ.வசனம்-17."விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால்தன்னில்தானே செத்ததாயிருக்கும்" என்று யாக்கோபு கூறுகிறார்.

வசனம் - 20. "கிரியை இல்லாத விசுவாசம் பயனற்றது"என்கிறார்.இப்பொழுது,"கிரியை இல்லாத விசுவாசம் செத்தது" என்று கூறுகிறார். .

முடிவுரை

அ. ஒருவிதமான மத சம்பந்தமான உண்மைகளை ஏற்றுக்கொள்வது உன்னை இரட்சிக்காது.

அர்த்தமற்ற மத சடங்காச்சாரங்களும் உன்னை இரட்சிக்கமாட்டாது, "இப்படிப்பட்ட விசுவாசம் பயனற்றதும், மரித்ததும், விக்கிரக ஆராதனைக்கு ஒத்ததுமாய் இருக்கிறது" என்று யாக்கோபு கூறுகிறார்.

ஆ. "விசுவாச" கிறிஸ்தவர்கள், "கிரியை" கிறிஸ்தவர்கள் என்று கிடையாது. கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தால் மாத்திரமே ஒரு கிறிஸ்தவன் இரட்சிக்கப்படுகிறான். இரட்சிப்பைக் குறித்து வேதத்தில் வேறொரு தத்துவமும் கிடையாது. கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தால், ஒருவன் செய்யும் "நற்கிரியைகள்" இந்த விசுவாசத்தை வெளிப்படுத்தும்.

இ. இன்று, இங்கு சிலர் "இரட்சிப்பு" அல்லது "மனந்திரும்புதல்" என்பதின் பொருள் பற்றி அறியாமல் இருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவில்லை. இங்கு சிலர் கிறிஸ்துவை அறிந்திருந்த போதிலும் விசுவாசத்தை விட்டு வழி விலகி போயிருக்கிறீர்கள். நீங்கள் ஆவியினால் வழி நடத்தப்பட முடியாது. உங்கள் வாழ்க்கையின் நடவடிக்கைகள், கிறிஸ்துவின் பண்புகளைப் பிரதிபலிக்காது. யாக்கோபு உங்களுக்குக் கீழ்க்கண்ட ஆலோசனைகளைக் கூறுகிறார்:

1. தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.2. தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்.3. பாவிகளே உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள், இரு மனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களை பரிசுத்தமாக்குங்கள். 4. நீங்கள் துயரப்பட்டு, துக்கித்து அழுங்கள் 5. உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது. 6. கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள். நீங்கள் இவ்வாறு செய்வீர்களானால், தேவன் உங்களை உயர்த்துவார். கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னிப்பார்.

நாவை அடக்குதல்

யாக்கோபு 3:1-12

முன்னுரை

அ. இரு நாக்கு உள்ளவனாக இராதபடி தன்னைக் காத்துக் கொள்வது, ஒவ்வொரு விசுவாசியின் கடமை ஆகும். தேவனை நேசிக்கிற மற்றவர்களின் வாழ்க்கையை கட்டுவதற்கும், பயப்படுத்துவதற்கும் ஏற்ற ஜீவனுள்ள வார்த்தைகளை மட்டுமே, கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் பேசவேண்டும். இது சபையை நடத்தும் தலைவர்களும், அப்போஸ்தலர்களும், தீர்க்கத்தரிசிகளும், சுவிசேஷர்களும், போதகர்களும், ஆசிரியர்களும் விசேஷமாக கடைபிடிக்க வேண்டியது.

ஆ. நமது ஆலயங்களில் நாவை அடக்க முடியாத அநேகர் இருக்கின்றனர். மற்றவர்களுக்கு வேதனையும் உள்ளத்தில் காயத்தையும், மனபாரத்தையும், கொடுக்கவேண்டும் என்பதற்காகவே, அவர்கள் மற்றவர்களைப் பற்றி தீதாக பேசுகின்றனர். இக்குழுவைச் சேர்ந்தவர்கள் தேவனின் மன்னிப்பைப் பெறவேண்டும். "அவர்கள் வாழ்க்கையில் பிசாசின் கிரியைகளின் மேல் வெற்றியைப் பெற அவர்களுக்கு உதவி தேவை" என்று யாக்கோபு கூறுகிறார். **I.** ஒரு நல்ல போதகன் தன் நாவை அடக்குகிறான் (1:1-2).

அ. வசனம் - 1. "உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக." சபையில் போதகர்கள் மிக முக்கியமானவர்கள். கிறிஸ்துவாலே அபிஷேகம் பண்ணப்பட்ட, விலைபெறப்பட்ட ஊழியம் அவர்களுக்கு உண்டு.

இ. (ரோமர் 12:7; 1கொரிந்தியர் 12:28; எபேசியர் 4:11). கீழ்க்கண்ட ஊழியங்களுக்கு பொறுப்பான குழுக்களில் இவர்களும் ஒரு பாகமாகும்.

1. தேவனுடைய மக்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்தல்.

2. சபையாகிய கிறிஸ்துவின் சரீரத்தை பெலப்படுத்தல்.

3. கிறிஸ்துவைப் பற்றிய அறிவிலும், விசுவாசத்திலும் விசுவாசிகளை ஒருமைப்படுத்தல்.

4. கிறிஸ்துவைப் பின்பற்றி செல்வதில் அதாவது கிறிஸ்துவுக்குள் வளரும்படி விசுவாசிகளைக் காத்துக் கொள்வது.

ஆ. வசனம் - 1. ஆனால் இந்த ஊழியத்தில் சில அபாயங்களும் உண்டு.

1. பரிசுத்த ஆவியினாலே அழைக்கப்படாமலே சிலர் இந்த ஊழியத்தை தன் சொந்த ஆர்வத்தில் தெரிந்து கொள்வது. இப்படிப்பட்டவர்கள் சுயலாபத்திற்காக உழைக்கின்றனர்.

2. சமுதாயத்திலும், சபையிலும் வல்லமையுடன், கவர்ச்சி கரமானதாக மாறும்போது அபாயகரமான ஊழியமாகிறது.

3. அவனுடைய பொறுப்பில் கிறிஸ்துவால் அழைக்கப் பட்டவர்கள். அந்தப் போதகரின் வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிகின்றனர். ஆகவே அவைகள் தேவனுடைய வார்த்தைகளாகவும், ஏற்றவாறு விவரிக்கப்பட்டதாயுமிருக்க வேண்டும்.

4. இந்த ஊழியத்திலுள்ள சபையின் உறுப்பினர்கள் வாக்குவாதத்திற்கும், பிரிவினைகளுக்கும், சண்டைகளுக்கும் மூல காரணமாக இருப்பர். இது கொரிந்து சபையில் நடந்தது (1கொரிந்தியர் 3:3-9).

நாவை அடக்குதல்

யாக்கோபு 3:1-12

இ. வசனம் - 1. "என் சகோதரரே அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக." யாக்கோபு தன்னையும் இந்த சபை ஊழியத்தில் சேர்த்துக்கொள்கிறார். போதிக்கிறவர்கள் மற்றவர்களைக் காட்டிலும், அதிக கண்டிப்பாக தண்டிக்கப்படுவர். அவர்கள் என்ன போதிக்கிறார்களோ அதற்காக மட்டுமின்றி அவர்கள் போதகர்களாக இருக்கும்போது அவர்கள் நடத்தைக்காகவும், நியாயம் தீர்க்கப்படுவர். அவர்கள் கிறிஸ்துவின் நீதிமன்றத்திற்கு முன் நிற்கும்போது அவர்கள் வார்த்தைகளும், வாழ்க்கையும் நுட்பமாக ஆராயப்படும்.

ஈ. வசனம் - 2. "நாம் எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்" எல்லா விசுவாசிகளும் தவறுகிறார்கள். இரட்சிப்பின் அனுபவத்திற்குப் பிறகு நாம் யாவரும் பாவ சுபாவத்தின் தூண்டுதலுக்கு அநேக நேரங்களில், அநேக வழிகளில் விழுந்து போகிறோம். (1யோவான் 1:8; லூக்கா 11:4; யாக்கோபு 4:5-10; 5:15-16, 19-20; நீதிமொழிகள் 20:9). இது போதகர்களுக்கும் (வரங்களுள்ள ஊழியத்திலுள்ள மற்றவர்களுக்கும்) மற்ற சக விசுவாசிகளுக்கும் பொருந்தும்உ. வசனம் -

2. ஒருவன் "சொல் தவறாதவனானால் அவன் பூரண புருஷன்" யாக்கோபு சபையிலுள்ள மிக மோசமான பாவமாகிய "அலப்புகிற நாவை" மையமாகக் கொண்டு பேசுகிறார். இது பாவசுபாவங்களில் அடக்குவதற்கு மிகக்கடினமான ஒன்றாகும். நாவை அடக்கிய ஒரு மனிதன் உண்டானால் அவன் பூரண மனிதன்.

அவன் பேசும்போது சொற்களை அடக்கக் கூடும். அதோடு தேவனுக்கு முன்பாக சன்மார்க்கனும், நீதிமானுமாய் இருப்பான்.

ஊ. ஆகவே நீ போதகனாக இருப்பாயானால் அல்லது போதகனாக விரும்பினால் கீழ்க்கண்டவற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

1. நீ கிறிஸ்துவால் இந்த ஊழியத்திற்கு அழைக்கப்பட வேண்டும்.

2. இந்த ஊழியத்தில் அநேக விழுகுழிகள் உண்டு.

3. நீ என்ன போதிக்கிறாய் என்பதற்கும், அவ்வாறு போதிக்கும் போது உன் வாழ்க்கையின் நடத்தைகளுக்கும் நீ கண்டிப்பாகக் கணக்கு கொடுக்க வேண்டும்.

II. "அதினாலே நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம்" (யாக்கோபு 3:9-12).

அ. வசனம் - 9. "தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட ஒவ்வொரு மனிதனும், தேவசாயலில் சிருஷ்டிக்கப்படுகிறான்" (ஆதியாகமம் 1:26).

ஆகவே அவன் இவ்வுலகத்தில் தேவனுடைய சாயலாக இருக்கிறான்.

ஆ. வசனம் - 9-10. "அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்" தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம். தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனிதனை அதினாலே சபிக்கிறோம்" ஆகவே நீ ஒரு மனிதனை சபிக்கும் போது, நீ தேவ சாயலில் உள்ள ஒருவனை சபிக்கிறாய்.

நாவை அடக்குதல்

யாக்கோபு 3:1-12

சபிப்பது என்பது ஒருவனுக்கு வேதனையும், கஷ்டத்தையும், மனபாரத்தையும் கொடுக்கும் பொல்லாத நோக்கத்தோடு தீது பேசுவதாகும். எனவே நீ தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்ட ஒருவனை சபித்துக் கொண்டு (துன்பத்தைக் கொடுக்கும் நோக்கத்ததோடு) தேவனையும் துதிக்க (அவரைப் போற்றி புகழ) முடியாது.

இ. வசனம் - 10. "இப்படி இருக்கலாகாது" இன்று நாம் "இது சரியல்ல" என்று கூறுவோம். நீ இரு நாக்குள்ளவனாய் பேசுகிறாய். ஆசீர்வதிப்பதும், சபிப்பதும் ஒரே காலத்தில் இருக்குமானால் இது இரட்டை நிலையை வெளிப்படுத்தும். இது பிசாசின் கிரியைக்கும் சமமாகும். ஆகவே இது பாவம். "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாய் இருக்கிறான்" (யாக்கோபு 1:8, 4:8) என்று யாக்கோபு கூறுகிறார். "தங்கள் வாயினால் ஆசீர்வதித்து, தங்கள் உள்ளத்தில் சபிக்கிறார்கள்" என்று சங்கீதக்காரன் தன் விரோதிகளைக் குறித்து பேசும்போது கூறுகிறார். (சங்கீதம் 62:4).

ஈ. நீ உன் நாவை அடக்கும்போது இவ்வாறு இருப்பாய்.

1. நீ தேவனைக் குறித்து புகழ்ந்து பாடுவாய், மனிதரையும் போற்றுவாய்.

2. தேவனையும் மிக உயர்வாக கருதி மேன்மை பாராட்டுவாய், அவர் சாயலாக சிருஷ்டிக்கபட்ட மனிதரையும் உயர்வாகக் கருதுவாய்.

3. உயிர்ப்பிக்க வல்லதும், நல்ல காரியங்களை ஊக்குவிக்கிறதும், ஏற்றவாறு வழிநடத்துவதும் சேவிக்கிறதும் மற்றும் ஆரோக்கியம் உண்டாகக் கூடியதுமான வார்த்தைகளைபே பேசுவாய். நீ அழிவை உண்டாக்குகிறதும், துன்பத்தையும், வருத்தத்தையும், மனபாரத்தையும் கொடுக்கிற வார்த்தைகளை பேசமாட்டாய். "ஞானமுள்ளவர்களின் நாவோ ஔஷதம்" (நீதிமொழிகள் 12:18).

எ. வசனம் - 11. "ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?" உப்பு நீரும், நல்ல நீரும் ஒரே ஊற்றுக் கண்ணிலிருந்து சுரக்காது. அதுபோல, தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனை சபிப்பதும், தேவனைக் குறித்து துதித்துப்பாடுவதும், ஒரு விசுவாசியின் வாயிலிருந்து வரமுடியாது.

ஏ. வசனம் - 12. "அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சைச் செடி, அத்திப்பழங்களையும் கொடுக்குமா?" இதற்கு பதில் "இல்லை" என்பதே. எவ்வாறு ஒரே மரத்தில் இரண்டு வகையான கனிகள், உண்டாக கூடாதது போல, ஒரு விசுவாசியின் வாயிலிருந்து, மனிதனை சபிப்பதும் தேவனைத் துதித்து பாடுவதும் கூடாத காரியம்.

ஐ. வசனம் - 12. "உப்பு நீர் ஊற்று நல்ல நீரைக் கொடுக்காது." எவ்வாறு உப்பு நீர் ஊற்று நல்ல தண்ணீரைக் கொடுக்க முடியாதது போல, ஒரு விசுவாசி, தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதனை சபிப்பதும், அதே வாயினால், தேவ சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதனை சபிப்பதும் முடியாத ஒன்றாகும்.

III. நீ உன் நாவை அடக்காவிட்டால் அது உன்னை அழித்துவிடும் (யாக்கோபு 3:3-8).

அ. நாவு, உடலின் மற்ற உறுப்புகளுடன் ஒப்பிடும்போது சிறியதாக இருந்தாலும் ஒரு மனிதனின் முழு வாழ்க்கையையும் அழிக்க வல்லது என்பதை யாக்கோபு மூன்று எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்குகிறார்.

நாவை அடக்குதல்

யாக்கோபு 3:1-12

ஆ. வசனம் - 3. "நாம் குதிரையின் வாய்க்குக் கடிவாளம் போடும் பொழுது" முதலாவது ஒரு பெரிய குதிரையை நினைத்துப் பாருங்கள். நீ அதன் அருகில் நின்று பார்த்தால் அது உண்மையாகவே எவ்வளவு பெரியது என்று விளங்கிக் கொள்வாய். நீ அதன் வாயில் கடிவாளம் போடுவதினால் அந்த மிருகத்தின் சரீரம் முழுவதையும் அடக்கமுடியும்.

இ. வசனம் - 4. "காற்றின் வல்லமையால் ஓடும் கப்பல்களை எடுத்துக்கொள்ளுங்கள்" அவை மிகப் பெரியவை. அது மிதந்து செல்ல மிக பலத்தக் காற்று தேவை. இருந்த போதிலும், வேறு திசைக்கு திருப்பிச் செல்ல, சிறிதான சுக்கானாலே முடியும்.

ஈ. வசனம் - 5-6. "சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொழுத்திவிடுகிறது" பரப்பளவிலும், ஏராளமான எண்ணிக்கை உள்ள மரங்களின் அடர்த்தியிலும் காடு மிகப் பெரியது. ஆனால் காய்ந்த இலையிலோ, புல்லிலோ பற்றிய சிறிய நெருப்பு காடு முழுவதையும் எரித்து விடும்.

எ. வசனம் - 6. "நாவும் நெருப்புதான். நமது அவயவங்களில், அது அநீதி நிறைந்த உலகம்" அடக்கப்படாத நாவு காட்டுத் தீக்குச் சமம். அநீதி நிறைந்த உலகம் முழுவதும், அந்தச் சிறிய நாவிலிருந்து வெளிப்படுகிறது. அது அடக்கப்படாவிட்டால் அதன் போக்கில் ஏராளமான மக்களை அழித்துவிடும்.

ஏ. குதிரையின் வாயில் உள்ள கடிவாளம், கப்பலை திருப்புகிற சுக்கான், மற்றும் ஒரு பெரிய காட்டை கொழுத்திவிடுகிற சிறிய நெருப்புப் போலவும் ஒரு அடக்கப்படாத நாவு, பெருமையானவைகளைப் பேசி, கறைப்படுத்தி, ஒரு மனிதனின் முழு வாழ்க்கையையும் அழித்துவிடும். "தன் உதடுகளை விரிவாய் திறக்கிறவனோ கலக்கமடைவான்" (நீதிமொழிகள் 13:3) என்று நீதிமொழிகள் கூறுகிறது.

ஐ. வசனம் - 6. "நரக அக்கினியால் கொழுத்தப் படுகிறதாயும் இருக்கிறது." பொல்லாப்பு நிறைந்ததும், அடக்கப்படாததுமான நாவு, நரக அக்கினிக்கு விதிக்கப்பட்ட பிசாசினால் ஏற்படுத்தப்பட்டது. (மத்தேயு 25:41). பிறருக்கு விரோதமாக பொல்லாப்பு பேசுகிறவர்கள் பிசாசினால் தூண்டப்படுகிறார்கள். தூஷிப்பதும், வேதனையும், உள்ளத்தில் காயத்தையும், மன பாரத்தையும் கொடுக்கும் நோக்கத்தோடு மற்றவர்களை தாக்குவது பிசாசின் கிரியையாகும். தீமைக்காக தங்கள் நாவை பயன்படுத்துகிறவர்கள், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அதை அடக்காவிட்டால் சாத்தானோடு நரக அக்கினியே உங்கள் முடிவு (யோவான் 8:44; மத்தேயு 5:22).

ஒ. வசனம் - 7-8. "சகல விதமான மிருகங்கள் பறவைகள் ஊரும்பிராணிகள் நீர் வாழும் ஜந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம், மனுஷசுபாவத்தால் அடக்கப்படும்" எல்லா உயர்ந்த வகைப் பிராணிகளும் மனிதனால் அடக்கப்படும். ஆதியில் தேவன் அவைகளை மனிதனுடைய ஆளுகைக்கும், அதிகாரத்திற்கும் கீழ்ப்படுத்தினார் (ஆதியாகமம் 1:28, 9:2; பிரசங்கி 17:4). கிறிஸ்துவுடன் இல்லாமல், பிசாசினுடைய அதிகாரத்திற்கும், ஆளுகைக்கும், அடியிலுள்ள ஒரு மனிதன், தன் நாவை அடக்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் ஆவியில் உயிருடன் இல்லை. அவன் உதவி பெற்றுக் கொள்ளாவிட்டால், தன்னையும், மற்றவர்களையும் அழித்து விடுவான்.

நாவை அடக்குதல்

யாக்கோபு 3:1-12

முடிவுரை

அ. ஒரு நல்ல போதகன் தன் நாவை அடக்குகின்றான். அவன் மக்களுக்கு நன்மை உண்டாக தேவனுடைய வார்த்தைகளை ஏற்றவாறு விளக்கி, பகிர்ந்து கொடுக்கிறான். நாவை அடக்கிய மற்றவர்கள் தேவனைத் துதித்துப் பாடி மனிதனையும் புகழ்கிறார்கள்.

ஆ. நாவை அடக்காதவர்கள் உதவிபெற்றுக் கொள்ளாவிட்டால், தாங்களும் அழிந்து மற்றவர்களையும் அழித்து விடுவர். பிசாசுகளுடன் நரக அக்கினியில் பங்கடைவர். அவர்கள் தேவனிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் வாழ்வில் பிசாசின் கிரியைகளில் வெற்றி அடைய அவருடைய உதவி தேவைப்படுகிறது. உங்களுக்கு உதவி செய்ய இயேசு இங்கு இருக்கிறார். அவர் உங்களுக்கு நிச்சயமாக உதவி செய்வார்.

உலக ஆசைகளும், விசுவாசியும்
யாக்கோபு 4:1-10

முன்னுரை

உலக சிற்றின்பங்கள் மீதுள்ள ஆசையே விசுவாசிகள் மத்தியில், கலகங்களும், சண்டைகளும் ஏற்பட காரணமாய் இருக்கிறதென்று யாக்கோபு கூறுகிறார். இந்த உலக சிநேகம் ஒருவனை தேவனுக்குப் பகைஞனாக மாற்றுகிறது. இருந்தபோதிலும், சண்டையிட்டுக் கலகம்பண்ணுகிற விசுவாசி தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினால், தேவன் அவர்களைத் தூக்கி எடுத்து ஆவியில் வெற்றியும் கொடுப்பார்.

I. "உங்களுக்குள்ளே யுத்தங்களும், சண்டைகளும் எதினாலே வருகிறது? உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா?" (யாக்கோபு 4:1-3).

அ. வசனம் - 1. "யுத்தங்களும் சண்டைகளும் நமக்குள்ளே உண்டாகிறது. இது மாம்ச இச்சைகளினால் உண்டாகிறது. தேவனைப் பிரியப்படுத்தவும், மாம்ச இச்சைகளை நிறைவேற்றவும், விசுவாசிக்குள்ள யுத்தம் எப்பொழுதும் பொங்கி எழுகிறது. மாம்சம், ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாய் இருக்கிறது" (கலாத்தியர் 5:17) மாம்ச இச்சையை நிறைவேற்ற இடம் கொடுப்போமானால், மற்றவர்களுடன் யுத்தம் பண்ணவும், போராடவும் துவங்கி விடுவோம்.

ஆ. வசனம் - 2. "நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை." உலகத்தின் பொக்கிஷங்களை விரும்பியும் ஒரு விசுவாசி பெற்றுக்கொள்ளவில்லை என்றால், அவனுக்குள் இருக்கும் கோபம் வெளியாகிறது. அவன் வெளிப்படையாக, கிறிஸ்துவுக்குள் தன் சகோதரர்களையும், சகோதரிகளையும் பகைக்கிறான்.

அவன்:-

1. அவர்களோடு யுத்தம் செய்கிறான்.

2. அவர்களோடு போராடுகிறான்.

3. அவர்களை அழிக்கப் பார்க்கிறான் (அவர்களைப் பகைத்து, தூஷித்து, மற்றவர்கள் முன்பாக நியாயம் தீர்க்கிறான் (யாக்கோபு 4:11,12).

4. உலக மக்களின் செல்வத்தையும், அவர்கள் நடைமுறை வாழ்க்கையையும், அவர்கள் புகழையும், வல்லமையையும் இச்சிக்கிறான்.

இ. வசனம் - 2-3. "நீங்கள் இச்சித்தும், உங்களுக்குக் கிடைக்கவில்லை" தேவனிடமிருந்து விசுவாசிகள், தாங்கள் விரும்பியதைப் பெற்றுக்கொள்ளாததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. அவர்கள் தேவனை நம்புவது கிடையாது. தாங்கள் விரும்புவதைப் பெற்றுக்கொள்ள தங்கள் சுயத்தையே சார்ந்திருக்கின்றனர்.

2. தவறான நோக்கத்தோடு விண்ணப்பம் செய்கிறார்கள். தங்கள் மாம்ச இச்சைகளை திருப்தியாக்குவதற்கு, தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள்.

ஈ. யாக்கோபு நம்முன் இரண்டு கேள்விகளை வைக்கிறார் 1) உன் வாழ்க்கையின் முதல் நோக்கம் என்ன? 2) அவை பாவ சுபாவத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதைச் சார்ந்ததா? அல்லது தேவனுடைய சித்தத்திற்கு முற்றிலும் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்ற வாஞ்சையுடையதா?

உலக ஆசைகளும், விசுவாசியும்
யாக்கோபு 4:1-10

உங்களுக்குள் யுத்தங்களும், சண்டைகளும் இருப்பதால், பாவசுபாவத்தை திருப்திபடுத்த வேண்டும் என்பதே, உங்கள் முதல் விருப்பம் என்று ஊகிக்கலாம்.

II. "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" (யாக்கோபு 4:4-5).

அ. வசனம் - 4. "நீங்கள்" என்று உலகமுழுவதும், பல தேசங்களில் சிதறி இருக்கும் விசுவாசிகளைக் குறித்து, விசேஷமாக யூத கிறிஸ்தவர்களைக் குறித்து யாக்கோபு பேசுகிறார் (யாக்கோபு 1:1,2:1,5:7-8).

ஆ. வசனம் - 4. விபச்சாரக்காரர். அநேக விசுவாசிகள் ஆவியில் உண்மையற்றவர்களாய் மாறிவிட்டனர். ஒரு மனிதனை பெருமைக்குட்படுத்தும், மாம்ச இச்சைகளையும், பார்வைக்கு இன்பமானவைகளையும், உலக சம்பத்தையும், வழிகளையும், தேவனைக் காட்டிலும் அதிகம் வாஞ்சிக்கின்றனர். அவர்கள் தங்கள் இருதயத்தில் ஏற்கனவே தீர்மானித்து, துணிகரமாக உலகத்தைத் தெரிந்து கொள்கின்றனர். இது முன் கூட்டியே சிந்தித்து செயலாற்றுவதாகும்.

இ. வசனம் - 4. "உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை" விசுவாசிகள் உலக சிநேகத்தைத் தெரிந்துகொள்ளும் போது, தேவனுக்குப் பகைஞராகின்றனர்.

இ. வெறுப்பவன் ஒரு விரோதி. எதிர்த்து நிற்பவன் ஒரு பகைஞன். "மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை ... மாம்சத்திற்கு உட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாய் இருக்க மாட்டார்கள்" (ரோமர் 8:7-8).

ஈ. "இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான் அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டை பண்ணுவான் (மத்தேயு 6:24).

ஈ. வசனம் - 5. "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறார்" மனிதனுக்குள் உள்ள ஆவி, உலகத்தின் பாவ சிற்றின்பங்களை அனுபவிக்க வேண்டும் என்ற சுபாவத்தை உடையது.

ஆதாமிடமிருந்து சுதந்தரித்த இந்தப் பாவ சுபாவம், ஒருவன் கிறிஸ்துவின் மீது விசுவாசம் வைக்கும்போது, சக்தியற்றதாக மாறுகிறது. அவன் மாம்சம், பாவத்திற்கு மரித்ததாக எடுத்துக்கொள்ளலாம் (ரோமர் 5:12, 6:18, 8:2, 5:6, 11:12). இருந்தபோதிலும் பாவசுபாவம் முற்றிலும் அகன்று போயிற்று என்று அர்த்தமல்ல. ஆனால் உயிருள்ளதாகவே அடங்கியிருக்கிறது. அது தொடர்ந்து ஒரு விசுவாசியினால் அடக்கப்படவேண்டும். (கலாத்தியர் 5:16-18).

எ. ஆகவே அவன் வாழ்க்கையில் சில நேரங்களில் அவன் சாத்தானால், வல்லமையாகத் தாக்கப்பட்டு பிசாசின் அதிகாரத்திற்குக் கீழ் வந்து விடுகிறான். அதனால்தான், சபைகளில் பகையும், பிரிவினைகளும், சண்டையும், பொறாமையும், விபச்சாரமும், பேராசையும், சுயநலமும், பெருமையும், சுபத்தைச் சார்ந்திருத்தலும், இந்த உலக அரசாட்சியில் நம்பிக்கையும், மற்றும் பொய் முதலான கேடுபாடுகள் காணப்படுகிறது.

உலக ஆசைகளும், விசுவாசியும்
யாக்கோபு 4:1-10

மற்றும் போதகர்களும், சுவிசேஷர்களும், ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களும், மூப்பர்களும், மற்ற விசுவாசிகளும், விசுவாச வாழ்க்கையிலிருந்து விழுந்துபோக மாட்டார்கள் (யாக்கோபு 5:19-20; மத்தேயு 24:10-12; 1தீமோத்தேயு 4:1; 2தெசலோனிக்கேயர் 2:3; 2பேதுரு 2:20-22).

ஏ. இந்த சாத்தானுடைய சக்தியும் அதிகாரமும் விசுவாசியின் வாழ்க்கையில், சிறிது காலத்திற்கு இருக்கும் அல்லது அநேக வருடங்களுக்கு நீடிக்கலாம். இது படிப்படியாக வளர்ந்து பெருகும். பரிசுத்த ஆவியின் வல்லமையினால் மட்டுமே உடைக்கப்படும். எனவேதான், யாக்கோபு, "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் ..... தேவனிடத்தில் சேருங்கள் ..... கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள் அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்" (யாக்கோபு 4:7-10) என்று கூறுகிறார்.

ஐ. இக்காரணங்களினாலேயே இயேசு கிறிஸ்து "தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்" (மத்தேயு 6:13) என்று ஜெபிக்கக் கற்றுத் தந்தார். அதாவது "எங்கள் வாழ்க்கையில் நாங்கள் அனுமதித்த பிசாசினுடைய அடிமைத்தனத்தினின்றும் கட்டுகளினின்றும் விடுவியும்" எனவே யாக்கோபு "ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம் பண்ணக்கடவன்" என்று கூறுகிறார் (யாக்கோபு 5:3). எப்பொழுதும், தொடர்ந்து உங்கள் மனம் புதிதாகிறதினாலே, பரிசுத்த ஆவியினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:2).

ஒ. இது எவ்வாறு நடக்கிறது? பொல்லாங்கனுக்கு அடியில் இருக்கும் இந்த உலகத்தில் நாம் வாழும்போது உலக வழிபாடுகளுக்கும், எண்ணங்களுக்கும் இடம் கொடுத்து விடுகிறோம். இவை சமீப காலத்தில் கணிப்பொறி விளையாட்டுகள், ஒலிப்பதிவு தகடுகள், வீடியோ மற்றும் டிவி. பத்திரிகைகள், கல்வி, நம் குடும்ப நபர்கள், சிநேகிதர், அறிமுகமானவர்கள் மூலமாக நம்மைத் தாக்குகிறது. நாம் ஜாக்கிரதையாய் இராவிட்டால் இவை நம் இருதயத்தில் வேர்கொண்டு வளர்ந்து நம் பாவ இச்சைகளில் விழுந்து விட காரணமாகிவிடும்.

III. நாம் தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தும் போது, உலக இச்சைகள் நம்மை மேற்கொள்ளாது (யாக்கோபு 4:6-10).

அ. வசனம் - 6. "அவர் அதிக கிருபை அளிக்கிறார்" பாவத்தில் விழுந்துபோன விசுவாசிகளுக்கு, தேவன் மிகுந்த கிருபை அளிக்கிறார் (துயவாக). இது மனிதனின் பாவ சுபாவத்தை தூண்டுகிற உலகத்தின் பொல்லாப்பைவிட பெரியது (வல்லமையானது). அவர் முன்னால் தாழ்த்துபவர்களுக்கு இந்தக் கிருபையை அவர் கொடுக்கிறார். (நீதிமொழிகள் 3:34; 1பேதுரு 5:5-6).

ஆ. வசனம் - 7. ஆகவே "தேவனுக்கு முன்பாக தாழ்மைப்படுங்கள்" தேவனுக்குக் கீழ்ப்படியுங்கள். அவருடைய அதிகாரத்திற்கும், கிருபைக்கும், பராமரிப்புக்கும் உங்களை ஒப்புக்கொடுங்கள். அவரை முழுவதும் சார்ந்திருங்கள். அவரை சந்தேகியாதிருங்கள்.

இ. இ. வசனம் - 7. "பிசாசிற்கு எதிர்த்து நில்லுங்கள் பிசாசோடு போராடுங்கள்". உலக சிற்றின்பங்களுக்கும், பாவ இச்சைகளுக்கும் நேராய் உங்களை பிசாசு சோதிக்கும்போது தடுமாறாமல் உறுதியாய் நிலைத்திருங்கள். "எதிர்த்து நில்லுங்கள், விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்" (1பேதுரு 5:9) என்று பேதுரு கூறுகிறார்.

உலக ஆசைகளும், விசுவாசியும்
யாக்கோபு 4:1-10

பிசாசுக்கு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் (எபேசியர் 6:13-18) என்று பவுல் அப்போஸ்தலர் கூறுகிறார்.

1. மற்றவர்களோடு கூடிய தொடர்பில் உண்மை யுள்ளவர்களாய் இருங்கள்.

2. கிறிஸ்துவின் சாயலாக மாறுங்கள்.

3. சுவிசேஷத்தின் மீது உறுதியாய் தரித்திருங்கள்.

4. எப்பொழுதும் கிறிஸ்துவைச் சார்ந்திருங்கள்.

5. கிறிஸ்துவுடன் நெருங்கிய தொடர்பில் நிலைத்திருங்கள்.

6. தேவனுடைய வார்த்தையின்படி நடவுங்கள். அவர் வார்த்தையால் பிசாசை எதிர்த்து நில்லுங்கள்.

ஈ. வசனம் 8-10. "உங்கள் கரங்களை சுத்திகரியுங்கள்"

1. தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாகவும், குற்றமற்றவர்களாகவும் இருங்கள்.

2. "தேவனைக் கிட்டிச் சேருங்கள், அவரை அண்டிக் கொள்ளுங்கள். அப்பொழுது அவர் உங்கள் மீது அளவற்ற கிருபையை பொழிந்தருள்வார்"

3. "உங்கள் இருதயத்தை சுத்திகரிங்கள்" பாவமான யாவற்றையும் விட்டு விலகுங்கள். உலகத்தை விட்டு விலகி, தேவனுக்கென்று உங்களை பரிசுத்தம் பண்ணுங்கள்.

4. "தேவனுக்கு முன்பாக துக்கித்து, அழுது, புலம்புங்கள்" ஆவியில் நீங்கள் மிகவும் கேவலமானவர்கள். உங்கள் உள்ளத்திலுள்ள ஆவிக்குரிய துக்கத்தை அறிக்கையிடுங்கள். நீங்கள் செய்த பாவங்களைக் குறித்து சத்தமாக அழுது துக்கப்படுங்கள்.

5. "தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்துங்கள்." தேவன் மிக மேன்மையானவர், உயர்ந்தவர். நீங்கள் கீழானவர்கள். உங்கள் இருதயத்தைத் தாழ்மைப்படுத்துங்கள். அவர் பாதத்தில் விழுந்து கிருபைக்காக கெஞ்சுங்கள்.

ஏ. கெட்ட குமாரன் போல் மனந்திரும்புங்கள் (லூக்கா 15:11). உங்கள் உணர்வு உயிரடையட்டும். தகப்பனிடம் திரும்பவேண்டிய தேவையை விளங்கிக்கொள்ளுங்கள். "தகப்பனே உமக்கு விரோதமாக பாவம் செய்தேன். உம்முடைய குமாரன் என்று சொல்லப்பட நான் பாத்திரன் அல்ல. உம்முடைய வேலைக்காரர்களில் ஒருவனாக என்னை ஏற்றுக்கொள்ளும்" என்று கூறுங்கள்.

ஏ. தாவீது இராஜாவைப் போல் தேவனிடம் சத்தமிட்டு அழுங்கள். "தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" என்று தாவீது அழுது தேவனை நோக்கிக் கூப்பிடுகிறார் (சங்கீதம் 51:1-3).

உலக ஆசைகளும், விசுவாசியும்
யாக்கோபு 4:1-10

ஐ. ஆயக்காரன் செய்ததுபோல் செய். தூரத்தில் நின்று, வானத்தையும் ஏறெடுக்கத் துணியாமல் மார்பில் அடித்துக்கொண்டு, "தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாய் இரும் என்று கூறினான்" (லூக்கா 18:9-14).

முடிவுரை

அ. உலக ஆசையே நமக்குள் யுத்தங்களுக்கும் சண்டைகளுக்கும் காரணமாகும். இவையே நம்மை தேவனுக்குப் பகைஞராகவும் மாற்றும். இருந்தபோதிலும், நாம் நம்மை தேவனுக்கு முன்பாக தாழ்த்தினால் அவர் நம்மை உயர்த்துவார்.

ஆ. யாக்கோபின் அறிவுரைகளை பாவம் செய்தவர்களாகிய நாம் பின்பற்றினால் ஆயக்காரனைப்போல் ஆசீர்வதிக்கப்படுவோம். அவன் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்பட்டவனாக வீட்டிற்குப் போனான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். தன்னை உயர்த்துகிற ஒவ்வொருவனும் தாழ்த்தப்படுவான். "தேவன் பெருமை உள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மை உள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (யாக்கோபு 4:6).

விசுவாச ஜெபம்

யாக்கோபு 5:13-20

முன்னுரை

அ. யாக்கோபு 4:1-5:5. சபையில் பாவம் செய்பவர்களை கடினமாகக் கண்டித்து அவர்களை மனந்திரும்பும்படி யாக்கோபு அழைக்கிறார். அவர் இதை முக்கியப்படுத்தி, இன்றுள்ள வேதபாகத்தில் தொடர்கிறார். ஆவியிலும், சரீரத்திலும், வியாதிப்பட்டு கஷ்டப்படுகிறவர்களைக் குறித்து முக்கியமாகக் கருத்துள்ளவராய் இருக்கிறார்.

I. நீங்கள் வியாதிப்பட்டு துன்பப்பட்டால் சபையின் மூப்பர்களை வரவழையுங்கள் (யாக்கோபு 5:13-14).

அ. வசனம் - 13. "உங்களில் ஒருவன் துன்பப்பட்டால்" உங்கள் வாழ்க்கையில் எதிர்பாராத இழப்புகள், உயிர்வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகள் கூட இல்லாமல், இருத்தல், உபத்திரவம் தரும் சூழ்நிலைகள் இன்னும் பலவிதமாக கஷ்டங்களை அனுபவிப்பதுதான் "சோதனை." சோதனைகளை துன்பம் என்று கூறப்பட்டுள்ளதும் ஒன்றேயாகும். இது யாக்கோபு முதல் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. (யாக்கோபு 1:2).

ஆ. பயப்படுவதும், குற்றம் சாட்டுவதும், முறுமுறுப்பதும் ஒரு விசுவாசிக்கு உபத்திரவம். மற்றும், துன்பம் நேரிடும்போது இயற்கையாக உண்டாகிறது. இருந்த போதிலும் ஒரு விசுவாசி, ஒரு அவிசுவாசிபோல் நடந்து கொள்ளக் கூடாது. அவன் பேசும்போது, பதிலளிக்கிற தேவன், அவன் சொந்த தேவன், அவனுக்காகக் கவலைப்படுகிறவர் அவனுக்குள் இருக்கிறார். (ஒருவன் துன்பப்பட்டால் ஜெபப்பண்ணக்கடவன்) என்று யாக்கோபு கூறுகிறார்.

இ. வசனம் - 14. "உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால்" வியாதிப்படுதல் என்பது சரீரம், ஆத்துமா, ஆவியில் பலவீனம் அடைந்து, உதவியற்று, சரீரத்தில் தளர்ச்சி அடைதல்.

ஈ. இவ்வாறான சரீரம், மற்றும் ஆவியின் இந்த நிலையில் உள்ளவர்கள் "சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக." கிறிஸ்தவ சபைகளில் மூப்பர்களே ஆவிக்கடுத்த காரியங்களில் முக்கியப் பொறுப்புள்ள அங்கத்தினர். அவர்கள் சபையில் வரங்களைப் பெற்றவர்கள். தேவனைப் பற்றும் விசுவாசத்தில் வளரவும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தப்பண்ணும் பொருட்டு, பரிசுத்த ஆவியினால் எழுப்பப்பட்டவர்கள். (எபேசியர் 4:11; அப்போஸ்தலர் 20:28; 1தீமோத்தேயு 3:5, 5:17; 1பேதுரு 5:1-3) அவர்களே சபையின் போதகர்கள்.

உ. வசனம் - 14. "அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள்" அதாவது உங்கள் கரங்களை அவன்மீது வைத்து எனப்படும்.

ஊ. வசனம் - 14. "அவனுக்கு எண்ணெய்பூசி" எண்ணெய் பூசுவது, விசுவாசத்தை ஊக்குவிக்கும் எண்ணெய் பரிசுத்த ஆவிக்கு அடையாளமாகும். எண்ணெயினால் அபிஷேகித்தல் முதல் முதலில் வனாந்தரத்தில் யூதர்கள் கீழ்க்கண்டவற்றில் பயன்படுத்தினர்.

1. ஆசாரியர்கள் (யாத்திராகமம் 29:7, 21; 30:30)2. உடன்படிக்கை பெட்டி, ஆசரிப்புக் கூடாரம், பலி செலுத்தும் பலிபீடம், பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள பணிமுட்டுகள், மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ளவைகள் (யாத்திராகமம் 30:22-29).

பின்னால் ஒரு யூதன் வியாதியாய் இருக்கும்போது ஒரு ரபியை அழைத்து, எண்ணெயினால் அவனை அபிஷேகித்து ஜெபிப்பது, விருந்தினருக்கு மரியாதை செய்வதற்கு அவர்கள் தலையில் எண்ணெய் பூசுவது வழக்கம். (லூக்கா 7:46).

விசுவாச ஜெபம்

யாக்கோபு 5:13-20

எ. எண்ணெய் பூசுவது புதிய ஏற்பாட்டுக் காலத்திலும்பழக்கமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. பன்னிரண்டு சீஷர்களை இயேசு அனுப்பியபொழுது அவர்கள் வியாதியஸ்தர்களுக்கு எண்ணெய் பூசி சுகப்படுத்தினர். (மாற்கு 6:13). எருசலேமில் உள்ள சபையின் ஆவிக்குரிய தலைவரான யாக்கோபு "சபையின்மூப்பரைஅழைத்து வியாதியஸ்தர்களுக்கு எண்ணெய்பூசி ஜெபிக்கச் சொல்லுங்கள்" என்று கூறுகிறார்.

ஏ. "ஜெபிப்பதும்எண்ணெய்சுவதும்" வியாதி உள்ளவர்களின்விசுவாசத்தைக்கூட்டி ஊக்குவிக்கும்பரிசுத்தஆவியின் பிரசன்னத்தையும் வல்லமையையும் அது குறிக்கும். இதே காரணத்தோடு, இன்றும் சபைகளில் தொடர்ந்து பயிற்சி அளிக்கவேண்டும். தேவனிடமிருந்து சரீரம் மற்றும் ஆவிக்குரிய ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ள சந்தேகப்படாமல் விசுவாசிக்க, ஒரு விசுவாசிக்கு உதவும்.

ஐ. வசனம் - 14. "கர்த்தருடைய நாமத்தினாலே"ஜெபிப்பதுகீழ்க்கண்டவற்றைக் காட்டும்.

1. ஆரோக்கியம் பெற்ற மந்திரத்தாலோ, பில்லிசூனியத்தாலோ, மந்திர கயிறுகளாலோ அல்ல என்று திட்டவட்டமாக விளக்கிக்கொள்ள முடியும்.

2. கிறிஸ்துவின் மீது நம்பிக்கையும், சார்ந்து வாழ்வதும் வளரும்.

3. கல்வாரியில் கிறிஸ்துவின் பலியால் வெளிப்பட்ட வல்லமை. அந்த வல்லமையும், அதிகாரமும் மனிதனின், சரீர, ஆவிக்குரிய விடுதலையும், ஆரோக்கியமுமாம்.

4. வானலோகத்திலும், இந்த உலகத்திலும், பேய்தனத்திற்கு அடுத்து பிசாசின் வல்லமையின் மேலும், அதிகாரத்தின்மேலும் கிறிஸ்து உயர்ந்தவர். (பிலிப்பியர் 2:9; எபேசியர் 1:21; 1யோவான் 3:8). "அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினால்" அலங்கார வாசலண்டை இருந்த சப்பாணி குணமாக்கப்பட்டான் என்று பேதுரு கூறுகிறார். (அப்போஸ்தலர் 3:16).

ஒ. துன்பத்தில் அகப்பட்ட விசுவாசிகள், அதிலிருந்து விடுதலை பெற, தப்பிக்க, அதில் ஒரு முடிவைக் காண தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும். (1கொரிந்தியர் 10:13). ஆவி, ஆத்துமா, சரீரத்தில் வியாதிப்பட்டவர்கள் இயேசுவின் நாமத்தினால் எண்ணெய் பூசி ஜெபிக்கும்படியாக சபையின் மூப்பர்களை அழைக்க வேண்டும்.

II. "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" (யாக்கோபு 5:15-16,19-20).

அ. வசனம் - 15. "விசுவாசமுள்ள ஜெபம்" "விசுவாசம்" என்று யாக்கோபு இங்கு கூறுவது, ஜெபிப்பதற்காக என்று அழைக்கப்பட்ட போதகர், மற்ற விசுவாசிகளின் விசுவாசத்தைக் குறிக்கும். இவர்களின் விசுவாச ஜெபம் பிணியாளியை குணமாக்கும்.

ஆ. தனக்காக மற்றவர்களை ஜெபிக்கும்படி அழைப்பதும் விசுவாசத்தின் செயலே ஆகும். அவன் அலங்கார வாசலண்டை இருந்த சப்பாணியைப் போன்று காணப்படுவான் (அப்போஸ்தலர் 3:5). அவன் போதகரையோ, மற்ற விசுவாசியையோ, ஜெபிக்க அழைக்கும்போது, அவன் தேவனிடமிருந்து அற்புதத்தை எதிர்பார்க்கிறான்.

இ. "விசுவாசம் (இன்று தொடர்ந்து) நம்பப்படுகிறவர்களின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாய் இருக்கிறது" (எபிரெயர் 11:1).

விசுவாச ஜெபம்

யாக்கோபு 5:13-20

தேவனோடு இன்றும் தொடர்புடைய ஒவ்வொரு விசுவாசியிடமும், நாம் இந்த விசுவாசத்தை எதிர்பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒருவரையே நாம் அழைக்கிறோம்' நம்மில் வியாதிப் பட்டவர்களையும் நொண்டியானவர்களையும் சுகமாக்க அவரை அசைக்கும் விசுவாசம். இந்த விசுவாசத்தை தேவன் நேசிக்கிறார்.

ஈ. வசனம் - 15. "அவன் பாவம் செய்திருந்தால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" பாவம் செய்த ஒரு கிறிஸ்தவனை மீட்பதைக் குறிக்கும். இன்று சபையில் இப்படிப்பட்டவர்கள் அநேகர் உண்டு' இப்படிப்பட்டவர்களை மனதில் கொண்டு, யாக்கோபு, "நாம் (கிறிஸ்தவர்கள்) நம் பாவங்களை அறிக்கையிட்டால், அவர் (தேவன்) நம் பாவங்களை மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு, அவர் உண்மையும் நீதியுள்ளவருமாய் இருக்கிறார் (1யோவான் 1:9). ஆகவே சரீரத்திற்காக ஜெபிக்கும்படி, போதகரை அழைக்கும் ஒவ்வொரு விசுவாசியும் தன் பாவங்களை தேவனிடம் அறிக்கையிட வேண்டும்.

உ. வசனம் - 19. ஒரு விசுவாசி "சத்தியத்தை விட்டு விலகி" இது சாத்தானின் கிரியையாகும். இது ஒரு விசுவாசியிடம் நடக்கும் போது இது தொடர்ந்து சில நிமிடங்களிலோ அல்லது சில வருடங்களிலோ வளர்ந்து விடுகிறது.

1. சோதனை பிசாசினால் பொல்லாத சிந்தனைகள் உண்டாவது; தேவனின் பராமரிப்பையும், பாதுகாப்பையும் சந்தேகிப்பது.

2. விலகிப்போதல் - தேவனின் அன்பையும், பாதுகாப்பையும், மிக மோசமாக, கேள்வி கேட்பது. மற்றும் ஒழுக்கக்கேடான பாவங்கள் சம்பந்தமான காட்சிகளைப் பார்ப்பதினால், தவிர்க்கமுடியாத அசுத்தமான கற்பனைகளுக்கு இடம் கொடுப்பது.

3. இழுக்கப்படுதல் - கிறிஸ்துவின் மீதும், தேவன் மீதும் உள்ள பற்று தளர்ந்துவிடுதல், தன் சுயசித்தத்திலும் பலவீனமாதல்

4. இச்சையானது கர்ப்பம் தரித்து - முழுவதும் பாவத்துக்கு ஒப்புக்கொடுப்பது தேவனை சந்தேகிப்பது.

5. பாவம் - பாவம் செய்தாயிற்று. இனிமேல் கிறிஸ்துவின் மீதும், தேவன்மீதும், உள்ள நம்பிக்கை முற்றிலும் இல்லாமல் போதல்.

6. மரணம் - ஆவிக்குரிய மரணம் கிறிஸ்து தேவன் இவர்களிடமிருந்து பிரிக்கப்படல்.

ஊ. இந்தப் படிப்படியான, தொடர் வளர்ச்சியை பிசாசு ஏவாளை சோதித்ததில் பார்க்கலாம். (ஆதியாகமம் 3:1-24).

ஸ்திரியானவள்:

1. தேவனுடைய வார்த்தையைச் சந்தேகிக்கும்படியாக சோதிக்கப்படுகிறாள்.

2. அந்தப் பழத்தை பார்வைக்கு இன்பமானதாகக் காண்கிறாள்.

3. பாவம் செய்கிறாள்.

4. தேவனிடமிருந்து பிரிக்கப்படுகிறாள். தேவனை சந்தேகித்து ஒழுக்கக்கேடான பாவங்களைச் செய்வதில் நடைபெறும் சீரான வளர்ச்சியை இங்கு காணலாம்.

எ. ஆதி சபையில், வேதத்தின் ஒழுக்க நிலையையும், கிறிஸ்துவின் போதனைகளையும் விட்டு ஒரு விசுவாசி விலகிப் போவதை மிக அபாயகரமான காரியமாக கருதினர். அத்தகைய பாவங்களாவன:

விசுவாச ஜெபம்

யாக்கோபு 5:13-20

1. பேராசையும், பணத்தின்மீது ஆவலும்.

2. அலப்புதல் (வீணப்பேச்சு), பகை, கோபம்

3. விபச்சாரம்.

4. பெருமை, அகங்காரம், தற்புகழ்ச்சி.

5. பட்சபாதமாக இருத்தல்.

6. தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டும் அதன்படி செய்யாதிருத்தல்.

7. நற்கிரியைகளில்லாத விசுவாசம், இப்படிப்பட்ட பாவங்கள் இன்றும் சபைகளில் ஆபத்திற்குரிய காரியங்களாக எடுத்துக் கொள்ளப்படவேண்டும்! இது நம் பிரச்சனைகளின் ஒரு பாகமாகும்! நாம் பாவத்தை சாதாரணமாக லேசாக எடுத்துக்கொள்கிறோம். இக்காரணத்தினாலேயே அநேக சபைகள், வல்லமை அற்றதாகவும் தோல்வியுற்றதாகவும் இருக்கிறது.

ஏ. வசனம் - 20. "தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன்"

1. மரணத்தினின்று (தேவனிடமிருந்து நித்தியமாக பிரிந்திருத்தல், அவர் கோபம், நியாயத்தீர்ப்பு முதலியவற்றிலிருந்து) காப்பாற்றுகிறான் 2. திரளான பாவங்களை மூடுவான் - தேவனுடைய பார்வையிலிருந்து நித்தியமாக அவன் பாவத்தை மூடி மன்னிக்கப்பட காரணமாயிருப்பான்.

"அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள், நட்சத்திரங்களைப் போல, சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள். (தானியேல் 12:3).

III. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கும்"

அ. வசனம் - 16. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கும்." "பெலன் உள்ளது" என்பது அந்த ஜெபம் மிகுந்த வல்லமை உள்ளதாய், அதாவது தெய்வீக சக்திவாய்ந்ததாய் இருக்கும். அந்த ஜெபம் நாம் எதிர்பார்க்கும் முடிவைக் கொடுக்கும் அது தன் வேலையை முடித்து விடும்.

ஆ. கிறிஸ்துவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்பட்டவனே நீதிமான் ஆவான். அவன் தான் அறிந்த பாவங்களை அறிக்கையிட்டு, வேதத்தின் சன்மார்க்க நிலைக்கு ஒத்த வாழ்க்கை நடத்துவான். எனவே அவன் மற்றொரு விசுவாசியின் காரியமாக, தேவனைக் கிட்டிச்சேர மிகுந்த விசுவாசம் உள்ளவனாய் இருப்பான்.

இ. ஆகவே ஜெபிக்கப்பட்ட ஒருவனின் தேவைகள் நடந்தேறத் தக்கதாக ஒரு விசுவாசியின் ஜெபம் வல்லமை நிறைந்து இருக்கும். அவன் ஜெபம் கிரியை செய்கிறது. அவன் ஜெபம் தேவனிடம் சேரும்போது, அவர் பதில் அளிக்கிறார்.

ஈ. வசனம் - 17-18 "எலியா என்பவன் நம்மைப் போல பாடுள்ள மனுஷன்" எலியா தேவபக்தியுள்ள மனிதாக இருந்த போதிலும், நம்மைப் போலவே பயம், சந்தேகம், புறக்கணிக்கப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களைச் சந்தித்தான் (1இராஜா 19:3-5, 10). எல்லா விசுவாசிகளுக்கும் இருப்பது போலவே அவனும் குறைபாடுகளும் பலவீனங்களும் உள்ளவனாக இருந்தான்.

உ. யாக்கோபு சபையில் ஒரு முக்கியமான சத்தியத்தைக் காட்ட விரும்புகிறார். எலியா "நம்மைப்போல்" இருந்தார்.

விசுவாச ஜெபம்

யாக்கோபு 5:13-20

எந்த ஒரு விசுவாசி அதாவது ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவோடு ஐக்கியப்படும் ஒரு கிறிஸ்தவன், மற்றவர்கள் வாழ்க்கையிலும், சரீரங்களிலும் உள்ள தேவைகளை, தேவன் சந்திக்கத்தக்க, வல்லமையுள்ள, கிரியைசெய்யும் ஜெபம் செய்யக்கூடும். அனனியாவும், "நம்மைப்போல்" பாடுள்ள மனுஷன். அவன், சவுல் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெறவும், அவன் பார்வையைத் திரும்ப பெற்றுக்கொள்ளவும் ஜெபித்தான் (அப்போஸ்தலர் 9:17-18).

ஊ. எலியா மழை பெய்யாமல் இருப்பதற்காகச் செய்த ஜெபம் விரிவாகக் கூறப்படவில்லை. ஆனால், மறுபடியும் மழை வருவதற்கான செய்த ஜெபம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது (1இராஜாக்கள் 17:1, 18:42-45).

1. எலியா தரையிலே பணிந்து, தன் முகம் முழங்காலில் பட குனிந்து (தேவனுக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்தினான்).

2. தன் வேலைக்காரனை நோக்கி, மழை மேகம் தோன்றுகின்றனவா என்று பார்க்கச் சொன்னான். (அவன் விசுவாசத்துடன் ஜெபித்தான்).

3. அவன் உறுதியாய் இருந்தான். அவன் கடவுள் பதில் அளிக்கும் வரை, இதேபோல் ஏழுமுறை செய்து ஜெபித்தான்.

4. ஒரு சிறிய மேகம் தோன்றுவதாகக் கூறப்பட்டவுடன் எலியா இராஜாவை நோக்கி பெருமழை வருவதற்கு முன் பிரயாணத்திற்கு ஆயத்தமாகச் சொன்னான்.

(அவன் அந்த நேரம் மிகுந்த விசுவாசமுள்ளவனாய் இருந்தான்).

முடிவுரை

அ. ஆவி, ஆத்துமா, சரீரத்தில் நம்மில் வியாதியாக உள்ளவர்களும், பாவம் செய்தவர்களும் ஜெபத்திற்கு வர ஊக்குவிக்கப்படுகிறார்கள். விசுவாசமுள்ள ஜெபம், பிணியாளியை சுகமாக்கும். நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கையிட்டால் தேவன் உங்களை மன்னித்து, எல்லா அநியாயமும் நீங்க, சுத்திகரிக்க உண்மை உள்ளவராய் இருக்கிறார் (1யோவான் 1:9).

ஆ. நான் உங்களை இவ்வாறு ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்க ஊக்குவிக்கிறேன். உங்கள் அயலார், சிநேகிதர் மற்றும் உறவினராகிய அவிசுவாசிகள், உங்களை ஜெபிக்க வேண்டிக்கொள்ளும்போது விசுவாச ஜெபத்தை அவர்களுக்காக ஏறெடுங்கள். தேவன் அவர்களை குணமாக்குவார். அவர்கள் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டால், அவைகளை மன்னித்து அவர்கள் ஆத்துமாவை இரட்சிப்பார்.